சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 11-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 44-ம் இலக்கம்

# கிறிஸ்தவ சபைகளின் மாநாட்டுக் கத்தோலிக்க பார்வையாளர்

## ஐவருள் இந்தியர் இருவர்

கார்த்திகை 18 முதல் மார்கழி 6 வரை டில்லியில் கூடப்போகும் அனைத்துலகக் கிறிஸ்தவ சபைகளின் மாநாட்டிற்கு ஐந்து கத்தோலிக்க பார்வையாளரை அனுப்பிவைக்குமாறு ரோமையிலுள்ள கிறீஸ்தவ ஐக்கிய செயலகத்துக்கு அழைப்புக் கிடைத்துள்ளது. முதன்முறையாக இத்தகைய அழைப்புவந்திருப்பதுசிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்க திருச்சபை மட்டில் பிரிந்த சகோதரர்கள் இப்போது வளர்த்துவரும் நல்லெண்ணத்தை வெளிப்படையாகக் காட்டுகின்றது. பார்வையாளர்களாகச் செல்ல நியமனம் பெற்றுள்ளவர்களில் இரு இந்தியரும் உளர்.

1. **பேராசிரியர் ஜான் க்ரூட்** — ஹாலந்தில் ரோமன் கத்தோலிக்க விவிலிய கழகத்தின் தலைவர். கிறீஸ்தவ ஐக்கியப் பணிக்காக டச்சு மேற்றிராணிமார்களால் நியமிக்கப்பட்டிருக்கும் பிரதிநிதி.

2. **வண. எம். ஜே. லெ கிய்யூ** — சாமிநாதர்சபையைச் சேர்ந்தவர். மறைநூல் வல்லுனர். பாரீஸ் பதிக்கருகிலுள்ள தம் சபை நிலையத்தில் மறைநூல் போதிக்கும் பேராசிரியர். ஐக்கிய இயக்கத்தைப்பற்றி ஆராய்ச்சி நூல்கள் சில எழுதியுள்ளவர்.

3. **வண. எற்வர்ட் டப்** — யேசு சபையைச் சேர்ந்தவர். அமெரிக்காவில் 'சென் லூயிஸ்' என்னுமிடத்திலுள்ள சமூகத்துறை நிலையத்தின் இயக்குனர். 'சோஷல் ஆர்டர்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர். புரொட்டஸ்தாந்த சபைகளின் சமூகச்சிந்தனை பற்றி நூல் இயற்றியவர்.

4. **சங். ரி. எடமரம்** — சிரோ மலபார் ரீதியைச்சேர்ந்த ஒரு யேசு சபைக் குரவர். அண்மைக்காலம் வரை பூனாவில் பாப்பரசர் குருமடத்தில் மறைநூற் பேராசிரியராகப் பணியாற்றி, இப்போது யேசுசபையின் மலபார் உபமாகாணத்திற்குத் தலைவராய் இருப்பவர்.

5. **வண. இவான் எக்ஸ்ட்ரோஸ்** — அலகாபாத் மேற்றிராசன சான்சலர், அம்மேற்றிராசனக் குருமடத்தில் மறைநூல் போதிக்கும் பேராசிரியர்.

## பல்கேரியாவின் சிலுவைப்பாதை

"சோபியா நகரிலே மேற்றிராணி ஆண்டகை ஈரம் மிகுந்து, எலிகள் மலிந்து கிடக்கும் இரு அறைகளிலே தம் இருக்கையை அமைத்துள்ளார். அவைகளுக்கு வரிகொடுக்கப்பணமின்றித்தவிக்கின்றார். பங்குக்குரு ஒருவர் சென்ற ஓராண்டளவாகத் தம் ஆலயத்தில் ஒரு ஞானஸ்நானம் கொடுக்கவோ, ஒரு திருமணம் மந்திரிக்கவோ இயலாது தவிக்கின்றார். கார்மேல்மடம் ஒன்றின் கன்னியர் எல்லாம் அணைகட்டும் வேலையில் அவதியுறுகின்றனர்" என்று பல்கேரியாவை நேரில் சென்று பார்த்த டக்ளஸ் சுவாமிகள் கூறுகின்றார். சுவாமிகள் மாறுவேடந்தரித்துப் பல்கேரியாவுக்குள் நுழைந்தார். அவர் மேலும் கூறுகின்றார்: ருஷியாவைக் காட்டிலும் பல்கேரியாவில் வேதகலாபனை மிகக்கொடூரமாக உள்ளது என்பது என்கருத்து; மத உரிமை உண்டு எனக் காண்பிப்பதற்காக ஒருசில ஆலயங்கள் எப்போதும் திறந்தே உள்ளன. ஆனால், இது ஒரு கள்ள நடிப்பு; உண்மையில் விசுவாசம் சிறிது சிறிதாக நசுக்கப்பட்டு வருகின்றது; திருச்சபையை முற்றிலும் அழிப்பதே பல்கேரிய அரசின் குறிக்கோள். ஏறக்குறைய எல்லா மேற்றிராணி ஆண்டகைகளும், குருக்களும் சிறைவாசம் செய்துவிட்டனர்; விடுதலைபெறுபவர் பெற்ற ஒருசில நாட்களுக்குள் திரும்பச் சிறைக்கு அனுப்பப்படுவர். சிறை வாசத்திற்கு உண்மைக் காரணம் ஒன்றுமே இராது.

"திருச்சபையின் சொத்துக்களெல்லாம் அபகரிக்கப்பட்டுவிட்டன; குருமடங்கள் மூடப்பட்டுவிட்டன; குருக்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகின்றது; முதியோர்களுக்கே ஆலயத்திற்குச் செல்ல அனுமதி உண்டு: வாலிபர்கள் ஆலயம் செல்ல முடியாது; மீறிச் சென்றால் வேலை பறிமுதல்; அவர்கள் மக்களுக்குக் கல்வி பறிமுதல்."

இப்பெரும் துன்பத்திலும் திருச்சபைக்குப் பிரமாணிக்கமாய்வாழும் பல்கேரிய கத்தோலிக்க மக்களின் பெரும் விசுவாசத்தைக் கண்டு வியப்புற்றார் டக்ளஸ் சுவாமிகள். துன்புறும் இச்சகோதரர்களுக்காக மன்றாட அனைத்துலகக் கததோலிக்க மக்களையும் கேட்டுக்கொள்கின்றார் சுவாமிகள். அவர்களின் துன்பம் நம்துன்பம். ஆகவே, மன்றாடுவோம்.

## திவ்விய பூசை தாய்மொழியில் வேண்டும்

பிரித்தானிய சுயமொழிச்சங்கம் ஆங்கிலமொழியில், திவ்வியபூசையும், திருச்சடங்குகளும் தேவதிரவிய அனுமானங்களும் நிறைவேற்ற உத்தரவுகோரும் மகஜர் ஒன்றை 1962-ம்ஆண்டு நடைபெறவிருக்கும் வத்திக்கான் பொதுச்சங்கத்துக்கு ஆயத்தம் செய்துவரும் மத்தியகுழுவுக்கு அனுப்பியுள்ளது.

லத்தீன் மொழியில் திருச்சடங்குகள் நிறைவேற்றப்பட்டுவருவதால், விசுவாசிகள்யாவரும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று திருச்சபை ஆசிக்கும் நன்மைகளை — சரியானமுறையில் அச்சடங்குகளில் பங்குபெற வேண்டுமென்ற விருப்பத்தை— அடையமுடியாது என்று இச்சபை காரணம் காட்டுகிறது. இங்கிலாந்து தேசத்தினதும், வேல்ஸ்தேசத்தினதும் சார்பாக விடுக்கப்பட்ட மகஜர் மேலும் கூறுவதாவது: ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் திருச்சடங்குகள்யாவும், பிரித்தானியாவில் ஆங்கிலமொழியில் இடம்பெற வேண்டும். வேல்ஸ்மக்கள் விரும்பும்பட்சத்தில், அவை வேல்ஸ் பாஷையில் நடைபெறலாம்.

மேற்றிராணியார், லத்தீன் மொழியில் சிலசடங்குகள் நிறைவேற்றப்படுவதுதான் பொருத்தமானது என்று கருதும் தருணங்களில், அவற்றை இலத்தீன் மொழியிலேயே நிறைவேற்றும்படி பணிப்பதற்கு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். ஆனால், திவ்வியபூசை ஆங்கிலமொழியில் நிறைவேற்றப்படவேண்டும் என்றே நாம் கருதுகிறோம். திருச்சடங்குநூல்களில உள்ள எல்லாத்தேவதிரவிய அனுமானங்கள், திருச்சடங்குகள், மற்றும் கிருத்தியங்கள் யாவும் ஆங்கிலமொழியில் நிறைவேற்றப்படலாம்.

ஞானஸ்நானம், மெய்விவாகம், அவஸ்தைபூசுதல் எனும் தேவதிரவிய அனுமானங்களைத் தாய்மொழியில் நிறைவேற்றப் பரிசுத்த ஸ்தானம் உத்தரவளித்துள்ளதை நாங்கள் தெளிவாக உணருகிறோம். எங்கள் கோரிக்கை தீவிரபோக்குடையதாகத் தோன்றினும், விசுவாசிகளின் ஞானநன்மையை அவதானிக்குமிடத்து அது அவசியமாகவே தோன்றும் என்றும் அம்மகஜர் குறிப்பிடுகின்றது.

## பாப்புவின் காரியதரிசி அமெரிக்கா செல்லுகிறார்

பாப்புவின் அரச காரியதரிசி கருதினால் சிக்கொஞ் ஞானி ஆண்டகை அமெரிக்க டல்லசில் நடக்கவிருக்கும் கிறிஸ்தவ போதக கூட்டத்தினர் நடத்தவிருக்கும் காங்கிரசிற்குத் தலைமைதாங்கச் சென்றிருக்கிறார்.

இவர் கருதினாலாகுமுன் ஐக்கிய அமெரிக்காவில் பாப்புவின் ஸ்தானாபதியாயிருந்தார்.

## யப்பானுக்குப் பாப்புவின் அன்பளிப்பு

வத்திக்கான் அரச காரியதரிசியான காலஞ்சென்ற கருதினால் தார்டினி ஆண்டகை தமது மரண சாதனத்தில் தமக்குரிய பொருட்களைப் பாப்புவுக்களித்திருந்தார். அவைகளுள் ஒன்றான பூசைக்குரிய ஆயத்தங்களை ரோக்கியோ அதிமேற்றிராணியாரான கருதினால் டொயி ஆண்டகைக்குப் பாப்பு அன்பளிப்புச் செய்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

### கத்தோலிக்கசங்கங்களின் மடுயாத்திரை

கத்தோலிக்க சங்கங்களின் பொதுச் சபையால் ஏற்படுத்தப்பட்ட 9-வது வருடாந்த மடுயாத்திரையில் முன்னூற்று எழுபத்தாறு யாத்திரிகர்கள் கலந்து, மடுத்திருப்பதியிலுள்ள மடுமாதாவின் கெபிக்குச் சென்றனர். வண. பிதா பிரான்சிஸ் டயஸ் கருணரட்டின தலைமை தாங்கினர்.

நிகழ்ச்சிநிரலில், திவ்வியபூசைப்பலி (வியாக்கியானத்துடன்) திருச்சிலுவைப்பாதை) செபமாலைக் காணிக்க விளக்கமும், திருமணித்தியாலம், மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம், சல்லாபங்கள், கோவிலுக்கு வெளியில் சிலுவைப்பாதை, குடும்பதினவைபவம் முதலியன அடங்கியிருந்தன.

தேவத்தையில் நடைபெற்ற குடும்பதினவைபவம்போன்று, மடுவிலும் முதன்முறையாகக் குடும்பதினம் கொண்டாடப்பட்டது. 45 தம்பதிகள் தனித்தனியே தமது மெய்விவாக வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தனர். இவர்களைச் சுவாமியார் வாசலில் சந்தித்து, சிறுசெபங்கள் செபித்தபின் இவர்களை உள்ளே அழைத்துச் சென்றுர்.

"தேவதாயே எங்களைப் பாரும்" என்ற பாட்டைப்பாடி, காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் செபத்தைச் சொல்லி, "ஒன்றுசேர்ந்த நாம் சந்தோஷிக்கிறோம்" என்றபாட்டைப் பாடினர். தம்பதிகள் கைகளைக் கோர்த்து நிற்கும்பொழுது அவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

மெழுகுவர்த்திகளுடன் நடைபெற்ற சுற்றுப்பிரகாரம் மிகவும் சிறந்தவைபவமாகும். யாத்திரிகர்கள் எல்லோரும் பல வெளிச்சக் கூடுகளைக் கொண்டுசென்றனர். சுற்றுப்பிரகாரத்தின்போது செபமாலைசொல்லிக்கொண்டு சென்றனர். ஞானஸ்நான வாக்குத்தத்தம் புதுப்பிக்கப்பட்டுக் காணிக்கைச்செபம் வாசிக்கப்பட்டபின், யாத்திரிகர்கள் கோவிலுள் சென்று சுவாமியாரால் அளிக்கப்பட்ட பாப்புவின் ஆசீர்வாதத்தைப் பெற்றனர்.

### யாழ்நகர ஆசனக்கோவிலில் பாப்பரசர்தினம் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது

யாழ்நகர ஆசனக்கோவிலிலே நம் பரிசுத்த தந்தையாம் 23-ம்அருளப்ப பாப்பரசினது மகுடாபிஷேக 3-வது ஞாபகதினமும், அவரது 81-வது பிறந்ததினமும் வெகுஆடம்பர ஆரவாரமாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை யாழ்ப்பாண மேற்றிராணியார் மகாவண. ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையவர்கள் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர்.

ஞாயிறுவாரம் மாலை 4-30 மணிக்கு வானம் வெளித்து ஒளிபரப்பியது. விசுவாசிகள் ஆசனக்கோவில் மைதானத்தில் பெருந்திரளாய்க் குழுமினர். அவ்வமயம் மகாவண. மேற்றிராணி ஆண்டகையவர்கள் குருமடத்து மாணவரும், குருமாரும் புடைசூழ மைதானத்தை அடைந்து, பாப்பரசரின் வெண்பொன் கொடியை உயர்த்திவைத்துப் பாடசாலை மாணவ மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அணிவகுப்பின்போது "கான் கிறிஸ்தவன் என்ற கீதம்" பாடப்பட்டது.

அழகாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் மேற்றிராணியாரவர்கள், பரிசுத்த பாப்பரசருக்கு அளித்த மரியாதைகளையும், சொற்பொழிவுகளையும் ஏற்றுக்கொண்டனர். முதன்முதலில், யோண் பொஸ்கோ பாடசாலை மாணவரொருவரின் உரையாடல் இடம்பெற்றது. இருவரின் மதலைமொழிகளினால் திரண்டிருந்தவர்கள் பெருமகிழ்வுற்றனர். தற்போதைய பாப்பரசரின் சிறப்பியல்புகளையும், மூன்றுவருட ஆளுகை காலத்திலும் அவர் ஆற்றியசேவை களையும்பற்றிச் சென்சாள்ஸ் ... சூலை மாணவன் அழகாக எடுத்துரைத்தார். சம்பத்திரிசியர்கல்லூரி மாணவன் கிறிஸ்துவின் பிரதிநிதியாம் பாப்பரசர், இவ்வுலகுள்ள எல்லா அரசர்களையும்விட மேலானவர் என்ற பொருட்பட உரைநிகழ்த்தினர். யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம்-ஆங்கில பாடசாலை மாணவி, பாப்பானவரை மதிக்கும்மக்கள், அவர் பிரதிநிதியாக எம்மை ஆளவரும், மேற்றிராணியாருக்கு அமைந்து அன்புகாட்டி, பிரமாணிக்கமாக ஒழுகவேண்டும் என்ற பொருள்படப் பேசினர்.

ஈற்றிலே, மேற்றிராணியாண்டவரவர்கள் பேசுகையில், பாப்பரசரின் சுபதினத்தைக் கொண்டாடும் இத்தருணத்தில், கிறிஸ்துவின் இராச்சியம் எங்கும்பரவ ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் அவர் கிறிஸ்துவின் இராச்சியத்தைப் பரப்புவதற்கு இச்சுபதினத்திலே மூன்று பிரதிக்கினைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார். அம்மூன்று பிரதிக்கினைகளும் செபம், தருமம், பிறர்சிநேகம் என்னும் புண்ணியங்களை அனுசரிப்பதிலே அடங்கும் என்றும், இக்காலத்தைவிடக் கத்தோலிக்காராகிய எமக்கு அதிக இன்னல்கள்நிறைந்த காலத்தை எதிர்நோக்கியிருக்கவேண்டி ஏற்படினும், அஞ்சவேண்டாம். சருவேசுரனில் நம்பிக்கையுடையவர்களாயிருங்கள் என்றும் குறிப்பிட்டார்.

மேற்றிராணியார் தமது உரைக்குப்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமருளினர். பாப்பரசரினகீதம் பாடப்பட்டதும்விழா இனிதே முடிவெய்தியது.

### மாந்தையில் திருவழிபாட்டுத்தினம்

சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி மிஷன் ஞாயிற்றுக்கிழமையை யொட்டி, கடந்த22-ந்திகதி மாந்தை விசாரணைப்பங்கிலே திருவழிபாட்டுத்தினம் ஒன்று நடாத்தப்பட்டது. விசாரணைப்பங்குக்குருவர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இலங்கையில் திருவழிபாட்டு வாழ்க்கைமுறைஸ்தாபனத்தின் தலைவரான வண. மைக்கல் ரெட்றிகோ, ஓ. எம். ஐ. சுவாமியவர்கள் இத்திருவழிபாட்டுத் தினத்தை நடாத்தினர்.

முதலநாள் சனிவாரம் 21-ந்திகதி வண. மைக்கல் ரெட்றிகோ சுவாமி அவர்கள், "கிறிஸ்தவர்களாகியநாங்கள் கிறிஸ்துநாதரிலும் கிறிஸ்துநாதருடனும் ஒன்றுகூடுகிறோம்" என்பது பற்றி விளக்கம் கொடுத்தார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவ அடையாளங்களும், அதில் கிறிஸ்தவர்களின் பங்கும், விசாரணைப்பங்குச்சமூகம், சுவிசேஷமும், திருச்சபைகுருக்களும் என்னும் விடயங்கள்பற்றி உரையாடப்பட்டன. அன்று இருசல்லாபக்கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றின்போது மேற்படி விடயங்கள் சம்பாஷிக்கப்பட்டன. சல்லாபங்கள் மிகவும் திருப்திகரமாய் நடந்தேறின. அன்று மாலையில் கண்டி கன்னியர்மட சிரேஷ்டவித்தி மாணவிகளால் "எஸ்தர்" எனும் நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

திவ்வியபூசையே நம்சீவியம். அதில் ஒவ்வொருவரும் பங்குபற்றுவதே வாழ்க்கையின் சிறந்த இலட்சியமாய் அமையவேண்டும் என்பதை விளக்கும் ஒரு காட்சிச்சாலையும் அமைக்கப்பட்டிருந்தது. அதில், படங்களும், உபகரணப்பொருள்களும், விளக்கப்படங்களும், அழகியசித்திரங்களும் மேற்படி நோக்கத்தை மையமாகக்கொண்டு அமைக்கப்பட்டிருந்தன.

### தாண்டவன்வெளி
### இளைஞர்மன்ற 2-ம்ஆண்டு நிறைவுதினம்

மட்டக்களப்பு தாண்டவன் வெளி யோசேவாஸ் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இம்மன்றத்தின் ஞானத் தலைவரும், கட்டளைக்குருவருமான வண. ஜி. சு. எல். வம்பேக் சுவாமியவர்களால் நன்றியறிதற் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்றஅங்கத்தினர் திவ்வியநன்மை பெற்றனர். பூசைமுடிந்ததும், புதியமூன்றுஅங்கத்தினர்கள் அடையாளச்சின்னங்கள் அணிந்து உறுதிப்படுத்தப்பட்டனர். மாலையில் வேஸ்பர் பாடப்பெற்று திவ்வியநற்கருணை ஆசீர்வாதமருளப்பட்டது. அப்போது மன்ற உறுப்பினர், கடவுளருக்கும், திருச்சபைக்கும் பிரமாணிக்கமாகச் சேவைசெய்வோமென்ற வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்தனர். இதன்பின்னர் தேனீர் விருந்து வைபவம் நடைபெற்றது. அவ்வமயம், ஏனைய கத்தோலிக்க சேவாசங்கங்களின் தலைவர்களும் பிரசன்னமாயிருந்தனர். வண. வம்பேக்சுவாமியார் மன்றம்ஆற்றிய சேவைகளைப் பாராட்டினர். புதிய உத்தியோகஸ்தர் தெரிவும் இடம்பெற்றது.

### திரிகோணமலை
### மேற்றிராசன ஐக்கியசங்கத்தின் ஆண்டுமகாநாடு

ஐக்கியசங்க மகாநாடு 28-11-61 சனிவாரம் மாலையாராதனையோடு ஆரம்பமானது. 29-ந்திகதி ஞாயிறு காலை 7 மணிக்கு திரிகோணமலை மேற்றிராணி ஆண்டகையவர்களுக்கு கலமூன்று யேசுவின் திருஇருதய ஆலயத்தில் பெருந்திரளான சேவையாளர்களும் கட்டளைக்குருவர் வண. அலக்ஸாந்தர் சுவாமிகளாலும் வாத்தியங்களும் மணிகளும் ஒலிக்க வெடிகளதிரப் பக்திபூர்வமாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆண்டவரவர்களால் பாடற்பூசை நிறைவேற்றப்பெற்றது. அதன்பின் கலமூன்று கத்தோலிக்க சங்கத்தாரால் பிரதிநிதிகளுக்குக் காலைப்போசனம் அளிக்கப்பட்டது. அன்றுகாலை 9-30 மணியளவில் மகாவண. இக்னேசியஸ் கிளனி ஆண்டகையவர்களும், மேற்றிராசனப்பங்குகளினின்று குருக்களும் சமுகமாயிருக்க திரு. ஜோசேப் ஜே. டேவிட் அவர்கள் தலைமையில் ஆண்டு மகாநாடு கலமூன்றுப்பாடசாலைத்திடல் மண்டபத்தில் ஆரம்பமானது. மேற்றிராசன இராசகுருவாம் நல்லாயர் அவர்களால் சிறந்தசொற்பொழிவாற்றப்பட்டது. கிறிஸ்தவர்கள்-சேவையாளர்கள் கிறிஸ்துவின் ஞானச்சரீரத்தின் அங்கங்கள். அங்கங்கள் பழுதடையின் சரீரமும் உயிரும் ஆபத்திலிருக்கும். எனவே, அங்கங்கள் சுகத்துடனும் நிலையில் சரீரம் சுகம்பெறும், விசுவாசிகளாயமக்கள் பலசேவைக்குழுக்களாக தொழிலாற்றியபோதும் மேற்றிராசன ஐக்கிய கட்டுப்பாடொன்றிய ஒருமைப்பாடடைந்து வாழவேண்டும். இவ்வண்ணம் பலமேற்றிராசனங்கள் கூட்டாக அகிலஇலங்கை ஐக்கிய முடையவர்களாய் இயங்க வேண்டும். இதனால் அரசாங்கத்தாலும் மக்களின் உண்மையான கோரிக்கைகளை மறுக்க முடியாத நிலைமையடையச் செய்யலாம். குருமார் மேற்றிராணிமார் தனித்தனியாகப் பதிலும் மக்கள் கூட்டாகக்குரல் எழுப்பினால் கத்தோலிக்க மக்களின் தேவைகளை எப்பவழமுடியும். ஐக்கியம் இச்சூழ்நிலையில் மிகமிகஅவசியம். எதிரிகள் எம்மைப்பல பிரிவுகளாகப் பிரித்து வெற்றியிட்ட வழிதேடுகின்றனர். ஆனல், விழிப்புணர்ச்சியோடு சேவைக்குழுக்களும் மக்களும் ஒத்துழைத்தால் எதிரிகளின் வெற்றியில் தோல்விகாட்டி அவ்வெற்றியை நாமே பெறலாம் எனத்தமது அழகுமொழியில் கூறினார்கள்.

காரியதரிசியால்கடந்தகூட்டறிக்கை; ஆண்டறிக்கையும் அறிக்கையும் தனதிகாரியால் கணக்கறிக்கையும் வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. சில பிரேரணைகளும் நிறைவேறின. அடுத்த ஆண்டிற்குரிய உத்தியோகஸ்தர்கள் நியமனம்பெற்றனர். தாபகர் தலைவராய் திரு. பி. சீ. முகல் தெரியப்பட்டார். தலைவர்: திரு. ஜோசேப் ஜே. டேவிட் அவர்கள். உபதலைவர்கள்: திருவாளர்கள் பி. சீ. முகல், எஸ். எல். தங்காராசா, எம். ஏ. சி. டேவிட் என்போர்கள். காரியதரிசியாக: திரு. கே. எல். இராஜேந்திரம். தனதிகாரியாக: திரு. எஸ். சு. அந்தனி. உதவிக்காரியதரிசியாக: திரு. எஸ். சவரிராஜா. தலைவர் தமதுரையில் சேவையாளரின் ஒத்துழைப்புகுறிப்பிடத்தக்க அளவுவேண்டப்படுகிறது எனக் கூறினர். திரிகோணமலை மேற்றிராசன சேமலாபசங்கத்திற்குத் திரு. கே. எல். இராஜேந்திரம் தலைவராகவும் திருவாளர்கள்: எல். என். முகல், திரு. எம். வெனடிக்ற், இணைச்செயலாளர்களாகவும், தனதிகாரியாக: திரு. எல். என். முகல் அவர்களும் நியமனம் பெற்றனர்கள். தலைவர் தமது பேச்சில் சேமித்தலின் அவசியத்தை வற்புறுத்தியதோடு இடுக்கண்நிறைந்த இப்பொருளாதார நெருக்கடியில் மக்கள் சேமிக்கப்பழகவேண்டுமென்றும் இச்சிறிய சேமிப்பினால் தமது அந்திய வேளையில் இனத்தவர்க்குப் பாரமாயிராது தனது இனத்தவர்க்கும் பொதுப்பணிக்கும் சிறிது சேமித்தவர்களாவார்கள் என்பதை மனதிற் கொண்டு புத்துணர்ச்சியோடு இச்சேமலாபசங்கத்தில் பலரும் சேர்ந்துழைக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார். பின்கூட்டம் நன்றியுரையுடனும் செபத்துடனும் நிறைவெய்தியது.

மட்டக்களப்பு
31-10-61

### பெரியமுல்லையில் சந்நியாசவாக்குத்தத்தம்

நீர்கொழும்பில் பெரியமுல்லை என்னுமிடத்தில் உள்ள சதாசகாயமாதாவின் சபைகன்னியரின் மடத்தில் சந்நியாச வாக்குத்தத்தங்கள் எடுத்துக்கொள்ளும்வைபவங்கள் நடைபெற்றன. அவ்வமயம் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த இருசகோதரிகள் முதலாம், மூன்றாம்வருட வாக்குத்தத்தங்களை எடுத்த சமயம் இடம்பெற்றது. பெருவலை வாசியான திரு. அல்போன்சஸ் பெரேராவின் புத்திரிகளான சங். சிஸ்டர் மேரிஅன்ரொனெற் சங். மேரி மார்கிறேற் ஆகிய இருசகோதரிகளுமே அன்று வார்த்தைப்பாடுகளை நிறைவேற்றியவர்களாவர். இவ்வைபவத்தின்போது கொழும்பு, அதிமேற்றிராசன விகாரிஜெனரல் அதிவண. மொன்சிஞ்ஞோர் அண்ணி டி சோசா அவர்கள் இக்கன்னியரின் வாக்குத்தத்தங்களை ஏற்றார். இருகன்னியர்களின் மாமனாரான அதிவண. அன்ரனி பெர்னாண்டோ சுவாமியவர்கள் திவ்விய பூசைநிறைவேற்றினர். அன்றுதினத்தில், தம்பிதையைச்சேர்ந்த செல்வி மெற்றில்டா பெரேராவும், மொறட்டுவையைச்சேர்ந்த ஓகா பெர்னாண்டோவும் கன்னிகாசபைக்குரிய உடைகளைப் பெற்றனர். இவர்களுக்கு மேரி அன், மேரிலினோ என்னும் நாமங்கள் சூட்டப்பட்டன. சங். சிஸ்டர் மேரி அகஸ்தா அவர்கள் 3-வது ஆண்டு சந்நியாச வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தார். இவ்வைபவத்தின்பின் மேற்படி 5 கன்னியரின் பெற்றோரும் அங்கு சமுகமாயிருந்த 500-க்கு மேற்பட்ட விருந்தினருக்குச் சிற்றுண்டி உபசாரங்களை நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## மக்களது அபின் மதம்

களுபோவிலவிலுள்ள ஸ்ரீசுதர்சனாராமய புத்த ஞாயிறுப் பாடசாலைப் பரிசளிப்புவிழாவிலே தெஹிவலை—கல்கிசை எம். பி.யும், சமசமாஜகட்சியைச் சேர்ந்தவருமான டக்றர் கொல்வின் ஆர். டி சில்வா அன்றுபேசியது வருமாறு: "ஞாயிறுப்பாடசாலையில் ஒரு பிள்ளை கண்டுகொள்ளும் சமயசூழ்நிலை வேறெங்காவது காணப்படவில்லை; ஆகவே, ஞாயிறுப்பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைக் கிரமமாக அனுப்புவது மிகவிசேஷப்பட்டதாகும். அதனால் அவர்கள் உண்மையான புத்தசமய சூழலிலே தங்கள் சமயகல்வியைப் பெறமுடியும்; மகத்தான புத்ததத்துவங்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கப் படுகின்றனவாஎன்றும், அவைகளை அவர்கள் கடைப்பிடிக்கிறார்களா என்றும் பார்த்துக்கொள்வது புத்த பெற்றோரின் கடமையாகும்" என்று மக்களது அபின் மதமென்று சாதிக்கும் சமசமாஜிஒருவர் கூறியிருப்பது ஒரு நவீனமே.

## அவலநிலையிலுள்ள பாடசாலைகள்

பழுதுபார்க்கப்படாத நிலைமையிலுள்ளனவும், அடித்துக்கொண்டு விழக்கூடிய அபாயநிலையிலுள்ளனவுமான ஒருபெருந்தொகைப் பாடசாலைகளை எடுக்கவேண்டிய பிரச்சினையொன்றைக் கல்விமந்திரிகாரியாலயம் எதிர்நோக்கியிருக்கின்றது. கல்விப்பகுதிஎடுத்துள்ள ஆரம்பபுள்ளிவிபரப்படி, வித்தியாதிபதியின் நிர்வாகத்திலுள்ள சுமார் முன்னூறுபாடசாலைகள் அடித்துக்கொண்டு விழக்கூடிய அபாயநிலையில் இருக்கின்றன. அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமிடத்து அவற்றுளே பழுதுபார்க்கப் படவேண்டிய விபரங்களைத் தெரிவிக்குமாறு கல்விஅதிகாரிகள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## மரம்நாட்டும் இயக்கம்

மழைகாலம் வந்ததோடு மன்னார் அரசாங்கஅதிபர் திரு. என். பி. செகநாதன் அவர்கள் மன்னார்மாவட்ட விவசாய விஸ்தரிப்புஅதிகாரி திரு. எஸ். நடேசன் அவர்களின்உதவியுடன் அங்கு பாழ்நிலங்களிலும், வீதிகளின் ஓரங்களிலும பணம்விதைகளை ஊன்றும இயக்கம்ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார். சென்ற சனிக்கிழமையன்று மாத்திரம் இலுப்பைக்கடவையிலே இருபதினாயிரம்பனம்விதைகள் ஊன்றப்படலாயின. மன்னார் மாவட்டத்திலே கிராமாபிவிருத்திச் சங்கங்களைச்சேர்ந்த ஆடவரும, பெண்களும் தென்னங்கன்றுகளை நாட்டுவதிலே முதன்முறையாகப் பெரிதும் உற்சாகத்துடன் பங்குபற்றிவருகின்றார்கள். நாட்டுவதற்கென்று பன்னூற்றுக்கணக்கான தென்னங்கன்றுகள் ஒளிநொச்சி நாற்று மேடையிலிருந்து தருவிக்கப்பட்டு முன்சொன்ன சங்கங்களைச்சேர்ந்த அங்கத்தவர்களுக்கு விற்கப்படலாயின.

## புதிய'சிங்களம்' நிபந்தனை

55வயதுநிரம்பிய அரசாங்க உத்தியோகஸ்தர்களில் சிங்களம்தெரிந்தவர்களையே அடுத்துநிகழும் 1962-ம் ஆண்டு தைமாதம் முதல்திகதியிலிருந்து தொடர்ந்து அரசாங்கசேவையில் இருக்க அனுமதிப்பதென்று இப்போது அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. அதனால் நாளாந்தகருமங்களைச் சிங்களத்தில் செய்யக்கூடிய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குமட்டுமே 55 வயதுக்குப்பின் தொடர்ந்து அரசாங்க சேவையில் கடமையாற்ற அனுமதியளிக்கப்படும்.

## புகையிரத விபத்துவழக்கு

வவுனியாப் புகையிரதவிபத்து வழக்கு குருநாகல் சுப்றீங்கோட்டிலே அசைஸ்கமிஷனர் திரு. எஸ். விஜயவர்த்தனவால் விசாரணைசெய்யப்படுகிறது. இதிலே வவுனியாவைச்சேர்ந்த ஜே. எம். டிங்கிறிபண்டா, பீற்றர் பியதாசா, விஜயக்கூன் குணபாலா, வீரசேகரா சைமன் எனும்நால்வரும் காங்கேசன்துறை-கொழும்பு புகையிரதத்தைக் கவிழ்க்கும் நோக்கமாகச் சட்டவிரோதமாய்க் கூட்டங்கூடினர்; புகையிரதப்பாதையின் இணைப்புத்தகடுகளைக் கழற்றினர்; புகையிரதத்திற்குச் சேதம்விளைத்தனர்; பிரயாணிகளில் ஒருவரான ஆர். ஆர். எட்வேட்ஸைக் கொலைசெய்தனர்; பி. பத்மநாதன், என். நாகசுந்தராசா என்பவர்களுக்கும், பிறருக்கும் படுகாயம்உண்டுபண்ணினர் என்பனவாகப் பன்னிருகுற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கிறார்கள்.

## றப்பர் ஏற்றுமதி

அடுத்தவருடமுதல் சிங்கப்பூர்விலையினும் ஐந்துசதம் கூடிய விலைக்குப் போலாந்துக்கு 6,500 மெற்றிக்தொன் ஷீற்றப்பரும், சீனவுக்கு 31,000 மெற்றிக்தொன் ஷீற்றப்பரும விற்பதற்கான இருஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அதனால் 1962-ம் ஆண்டு முடியும்வரை — அதாவது ஒப்பந்தங்கள் முடியும்வரை அரசாங்கமே றப்பரைவாங்கி ஏற்றுமதிசெய்யும். சீனு தான்வாங்கும் றப்பருக்குப்பதில் இரண்டு இலட்சம்தொன் அரிசி இலங்கைக்கு விற்கும்.

## ஆசிரியரும் அரசியலுரிமையும்

கல்விமந்திரி சென்றவெள்ளிக்கிழமை புத்தள - சிலாபவட்டார ஆசிரியர்கள் சங்க கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசியபோது இப்பொழுது ஆசிரியர்களுக்கு அரசியல்உரிமைகள் வழங்குவது சாத்தியமல்ல; நான் ஒருகல்லூரி அதிபராய் இருந்தபோது இந்தஉரிமைகளை அனுபவித்தேன்என்பது உண்மையே; ஆனால், இன்று அரசாங்கம் சகலபாடசாலைகளையும் எடுத்துக்கொண்டது; ஆகவே, ஆசிரியர்களுக்கு அரசியல்உரிமைகள்வழங்கினால் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கும் இவ்வுரிமைகள் தங்களுக்கும் வழங்கப்படவேண்டுமென்றுகேட்பார்கள்; போதிய நிதியில்லாமையால் ஆசிரியர்களின் சட்டரீதியான வேண்டுகோள்களுக்கு இணங்கமுடியாமலிருக்கிறது; ஆயினும் நிதிகிடைத்ததும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தியாக்க இயன்றதைச் செய்வேனெனக் கூறியிருக்கின்றார்.

## தொழிலும் உயர்வுதாழ்வும்

படித்தவாலிபர்கள் தொழிலில் உயர்வுதாழ்வென்ற வேற்றுமையையொழித்துக் கமத்தொழில், கடற்தொழில் ஆதியாம் தொழில்களில் ஈடுபடுவார்களானல் தமிழ்மக்களின் எதிர்காலம் சுபீட்சமாயிருக்கும்; தமிழ்மக்கள் தங்களது எதிர்கால நிலைமைபற்றிக் கவலைப்படவேண்டியதில்லை; வாலிபர்கள் பருத்திச்செய்கையில் இறங்கினல் நல்லஎதிர்காலம்உண்டு; மீன்பிடிதொழிலை இயந்திரப்படகுகளின் உதவிகொண்டுநடத்தினல் இலங்கைக்குத் தேவைப்படும் கருவாடுமுழுவதையும் உற்பத்திசெய்யமுடியுமென்று உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம்அவர்கள் குரும்பசிட்டிச் சனசமூகநிலைய கிராமமுன்னேற்றசங்க ஆண்டுவிழாவில் பேசியிருக்கின்றார்.

## சேமமாக வந்துசேர்ந்தார்

பாராளுமன்றத்தில் காங்கேசன்துறைப் பிரதிநிதியும், தடைசெய்யப்பெற்ற தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்அவர்கள் தமது பாரியாருடன் எயர்இந்திய விமானமொன்றிலே சென்ற சனிக்கிழமை பிற்பகல் இரண்டுமணியளவில சேமமாக இரத்மலானை விமானநிலயத்தில் வந்திறங்கினர். அப்போது தமிழரசுக்கட்சிஎம். பி.களும், செனற்றர்களும், மற்றும்சில தமிழ் எம். பி. களும், மகாகனம், பிஷப் குலேந்திரன், சேர் கந்தையா வைத்தியநாதன், ஜனப் ஏ. அசிஸ், திரு. எஸ். சோமசுந்தரம், திரு. கே. இராஜலிங்கம்ஆதியாம் பிரமுகர்களும்உட்பட ஆயிரக்கணக்கான தமிழ்ப்பேசும்மக்களும் வாழ்த்துக்கீதங்கள், ஜே, ஜே,என்ற கோஷங்கள்மத்தியிலே அபிமானிகள்பலரும் மலர்மாலைகள் சூட்டிநிற்க ஆடம்பரமாக அவரை வரவேற்றுநின்றார்கள். எவ்விதமான பொலிஸ் பந்தோபஸ்தும் இல்லாதிருந்தும எல்லோரும் கட்டுப்பாடாக நடந்துகொண்டார்கள். திரு. செல்வநாயகம்அவர்கள் நல்லசுகபல தோற்றமுடையவர்போலும், ஏறக்குறைய முற்றிலுமே குணமடைந்தவர்போலும் காட்சியளித்தார். செவிப்புலனுக்காக வழமையிலே அவர் தரித்துக்கொள்ளும் கருவி அவருடையகாதில் அன்று இருக்கவில்லை. அவருடைய கேள்விப்புலன் இப்போது செம்மையுற்றிருப்பதாக அவருடைய உறவினர் தெரிவித்தனர். இன்னும்அவர் தமதுஉறவினர், சிநேகிதரிடம் தமதுகைகளை நீட்டியும், மடக்கியும் தாம் குணமடைந்துவிட்டதை மகிழ்ச்சியுடன் காட்டினர். ஈற்றிலே அவர் தமதுஇல்லத்திற்குப் பெரிய ஊர்வலமாக அழைத்துச்செல்லப் பெற்றனர்.

## பெற்றோர்மீது வழக்கு

ஏழுவயதான தங்கள்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத்தவறும் பெற்றோர்மீது வழக்குத்தொடர வேண்டுமென்று தேசியகல்விக்கமிஷன் தனது இடைக்கால அறிக்கையிலே சிபாரிசு செய்திருக்கிறது. ஆறுவயதிலே பிள்ளைகள் பாடசாலைக்குக் கட்டாயமாக அனுப்பப்பட வேண்டுமென்றும் கமிஷன் தனது சிபாரிசிலே குறிப்பிட்டிருக்கிறது.

## ஆசிரியர்கள்சங்க தலைவரின் வேண்டுகோள்

கொழும்பிலே சென்யோசெவ் கல்லூரி மண்டபத்திலே அகில-இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் வருடாந்தமகாநாடு சென்றசனிக்கிழமை விமரிசையாக நடந்தேறியது. அதிலே அச்சங்கதலைவர் திரு. ஜே. டி. ஜயவிக்கிரமா அவர்கள் பேசியபோது: "எதிர்காலப் பிரஜைகளாகிய மாணவர்களிடையே சுமுகமான நல்லுறவு நிலவவேண்டுமானல சகலபாடசாலைகளிலும் இந்நாட்டின் தேசியமொழிகளான சிங்களமும், தமிழும் போதிக்கப்படவேண்டும்; தற்போதைய அரசியற்சூழ்நிலையிலே சிங்களம் கட்டாயபாடமாகப் போதிக்கப்படவேண்டுமென்று தேசியக் கல்விக்கமிஷன் கருத்துத்தெரிவித்திருப்பது அறிவுடைமையாகாது; பிரதமர் திருமதி சிறிமாவோ தேசியப்பிரச்சினையைத் தீர்ப்பதிலே உண்மையான ஆர்வம் கொண்டிருப்பதால் இருதேசியமொழிகளும் எல்லாப்பாடசாலைகளிலும் போதிக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தை விரைவிலே நடைமுறைக்குக் கொண்டுவருவாரென எதிர்பார்க்கிறேன்; அவ்வாறு செய்தால்தான் இந்நாட்டுமக்கள் ஒற்றுமையோடும், சகோதரமனப் பான்மையோடும் வாழமுடியும்; இலங்கைமக்களின் மந்திரியாகப் பதவியேற்றுள்ள கல்விமந்திரி சிங்களஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காகவே தான் உழைக்கிறேனென்று ஆசிரியர்களிடையே பிளவுண்டாகும்வகையில் பேசுவது தகாது; இதற்குமுன் பதவிவகித்திருந்த கல்விமந்திரிகள் இந்தவிதமாக நடந்துகொண்டதில்லை" எனக் கூறலாயினர்.

## வெளிநாட்டுச் செய்திகள்

● அவசியம்நேர்ந்தால வானவெளியிலும் அணுக்குண்டுப்பரீட்சைகள் நடத்துவதற்கான சகல ஆயத்தங்களையும் அமெரிக்கா செய்யும்; இரானுவ பலத்திலே எந்தஒருநாட்டிற்கும் குறைவானதாக அதுஇருக்க விரும்பவில்லையென்று அமெரிக்கஜனதிபதிகென்னடி சென்றசனிக்கிழமை அறிவித்திருக்கின்றார். தேசியபாதுகாப்புச் சபையுடன் கலந்து ஆலோசித்தபின்னரே அவர் இந்தஅறிக்கையை வெளியிட்டார்.

● அணுப்பரீட்சைகளினால் ஏற்படும் நச்சுசாம்பல் வீழ்ச்சியிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும முறைகளை விளக்கிக்கூறும துண்டுப்பிரசுரம்ஒன்றை அமெரிக்கஅரசாங்கம தயாரித்திருக்கிறது. இதிலே அறுபதுஇலட்சம்பிரதிகள் இந்தமாதத்திலே அமெரிக்கமக்களுக்கு அனுப்பப்படவிருக்கின்றன. குடும்பதலைவர்களையெல்லாம் இதனைப் படிப்பிக்குமாறு அமெரிக்கஜனதிபதி கென்னடி டெலிவிஷன் மூலம கேட்டுக்கொள்ள விருக்கின்றார்.

● சம்யூனிஸ்தசீனவும் தன்னுடைய முதலாவது அணுக்குண்டுப் பரீட்சையைநடத்த ஆயத்தப்படுவதாய்ச் செய்திகிடைத்திருக்கிறது. இதற்கென்று சீன, வெளிமங்கோலிய,ருஷிய எல்லைகளையடுத்து இரண்டாயிரம் மைமல் விஸ்தீரணமான பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப் படுகிறார்களாம். பரீட்சிக்கப்படவிருக்கும் அணுக்குண்டின் பரிமாணமும, பரீட்சிக்கும்திகதியும் இன்னுமே குறிக்கப்படவில்லை.

● எலிசபேத் மகாராணியாரின் சகோதரியான மார்கறெற்இளவரசி சென்ற வெள்ளிக்கிழமை ஓர் ஆண் குழந்தையைப் பிரசவித்திருக்கின்றார். இது அவரின் முதற்குழந்தையாகும். இது பிரித்தானிய சிமமாசனத்திற்கு ஐந்தாவது வாரிசாகும். மகாராணியாரின் மூன்றுபிள்ளைகளும், மார்கறேற் இளவரசியுமே ஏனையநான்கு வாரிசுகளுமாவர்.

● இம்மாதம் 20-ந்திகதிவரையிலே அமெரிக்க ஜனதிபதியின் பாரியாரான திருமதி ஜக்குவலின் கென்னடி தனிப்பட்டமுறையிலே இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் விஜயஞ்செய்து, இந்தியாவிலே பிரதமர்நேருவினதும், மகள் திருமதி இந்திராகாந்தியினதும், பாகிஸ்தானிலே அதன் ஜனதிபதியினதும் விருந்தாடியாகவிருந்து இரண்டுவாரகாலம் இருநாடுகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்வாரெனச் செய்திகிடைத்திருக்கிறது.

● காலஞ்சென்ற திரு. டாக். ஹமர்ஷீல்ட்டின் இடமாக ஐக்கியநாடுகளின் பொதுச்சபைக் காரியதரிசியாக அச்சபையிலே பர்மாவின் பிரதிநிதியான திரு. யு. தாண்ற் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பெற்றிருக்கின்றார். ஐ. நா. சபையிலே அங்கம்வகிக்கும் 103நாடுகளும் இவர் தெரியப்படுவதற்குப் பேராதரவு அளிக்கலாயின.

● பிரித்தானிய வெளிநாட்டுமந்திரியான ஹோம்பிரபு சென்ற வெள்ளிக்கிழமை தமது கட்சி மகாநாட்டில் பேசியபோது: ருஷியாவின் பெரிய நகரங்களில் பெரும்பாலானவைகளை இருந்தவிடமுமதெரியாமலே அழித்துவிடப் போதிய அணுக்குண்டு ஆயுதபலத்தைப் பிரித்தானி கொண்டிருக்கிறதெனக்கூறிச் சோவியற்ருஷியாவை எச்சரித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை.வழிகாட்டி

### கார்த்திகை மாதம் — 1961

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | ஞா. | 2 | பெந்தெக்கோஸ்தின்பின் 25-ம் ஞாயிறு | (வி. ம.) | ப. |
| 13 | தி. | | அர்ச். திதாக்கியார் | ... | வெ. |
| 14 | செ. | | அர்ச். யோசபாத்தப்பர் | ... | வெ. |
| 15 | பு. | | அர்ச். அல்பேட் | ... | வெ. |
| 16 | வி. | | அர்ச். யேட்றூட் அம்மாள் | ... | வெ. |
| 17 | வெ. | | அர்ச். புதுமைக் கிறகோரியார் | | வெ. |
| 18 | சனி | | அர்ச். இராயப்பர், சின்னப்பர் மகாலயங்களின் அபிஷேக தினம் | | வெ. |

சத்திய வேத

# பாதுகாவலன்

1961-ம் ஆண்டு

கார்த்திகைமாதம் 11-ந்திகதி

## சமாதானத்தின் தந்தை

பாப்பரசர் சுபதினத்தைக் கத்தோலிக்க உலகமுழுவதும் சென்ற5-ந்திகதி ஞாயிறுவாரம் மிகுந்தமனோகரத்துடன் கொண்டாடியது. அன்றுதினம் அவர் திருமுடி சூடிய மூன்றுவதுஆண்டு நிறைவு விழாவாக மாத்திரமல்ல, ஆனால், அவரது 80-வதுபிறந்ததனப் பெருவிழாவாகவும் இருந்தமையால் அன்றையகொண்டாட்டம் வழமையிலும் அதிகம்பரிமளிக்கலாயிற்று. பாப்பரசரைக் கௌரவிக்குமுகமாகக் கத்தோலிக்கஉலகம் மாத்திரமல்ல, ஆனால்,ஏறக்குறைய உலக நாடுகள்அனைத்துமே மனப்பூர்வமாக அதில்கலந்து கொண்டன. வத்திக்கானிலே அன்றைய மகா வைபவங்களில்மட்டும் 54நாடுகள் அதிகாரபூர்வமாகக் கலந்துகொள்ளலாயின. இவைகள்தவிர வத்திக்கானுடன் இராசியஉறவுகொண்டிராத ஐக்கியஅமெரிக்கதேசம், கோறியா, ஈருய்க், ஜோர்தான் கொங்கோ முதலாம் பலநாடுகளும் சேர்ந்துகொண்டன, இவ்விதம் அவைகள் பாப்பரசர்பால் நல்லெண்ணமும், நன்மதிப்பும்கொண்டு, அவரைக் கௌரவிக்கவும், அன்புபாராட்டிக் கண்ணியப்படுத்தவும் வேண்டிய காரணம்என்ன ?

சண்டமாருதத்தினாலே அலைமோதும் சமுத்திரமேபோன்று சமாதானத்தைக் கண்டடையவியலாது தத்தளித்துக்கொண்டிருக்கும் இன்றையஉலகமக்களுக்கு அவர் நம்பிக்கையூட்டும் ஒருசமாதான ஸ்தம்பம்போல் காட்சியளிப்பதே. அவர் பாப்பரசராகப் பதவியேற்ற நாள்முதல் காந்தமேபோன்று எவரையுமேகவர்ந்துகொள்ளும் ஒரு அன்புத்தந்தையாய் விளங்குகின்றார். சமாதானம்என்பது பரலோகத்திலிருந்து அருளப்படவேண்டியதுஎன்பதை நன்குணர்த்தித் தமது ஞானமக்களெல்லாம் அதற்காக இடையறாதுகடவுளை இரந்துமன்றாடும்படியாகப் புத்திபுகட்டியும், உற்சாகமூட்டியும் வருகின்றார். தமதுசொற்பொழிவுகள், வானொலிச்செய்திகள், நிருபங்கள், திருமுகங்கள்மூலம் அரசுகள், சனசாகியங்களைச் சமாதானத்தின்வழிச்செல்லுமாறு பரிந்துபேசுகின்றார். உலக நாடுகளிடையே சௌசன்னியமும், அமைதியும், சமாதானமும் நிலவும்படியாய், அயராது வருந்தியுழைக்கின்றார். தமது ஞானஆட்சியின் மூன்றுவருடகாலத்திலும் அவர் சாதித்துள்ளவைகள் உலகவரலாற்றில் சிறப்பாக இடம்பெறுமென்று எவராவதுசாற்றுவார்களானால் அதையிட்டுச் சந்தேகிக்க இடமேயில்லை.

இன்று தர்மத்துக்கும், அதர்மத்துக்கும், ஆஸ்திகத்துக்கும், நாஸ்திகத்துக்குமிடையே இறந்தபோர் ஒன்று நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. இதில் தர்மம்வெற்றிபெறுமா? அன்றேல் அதர்மம்தான் வெற்றிபெறுமா? ஆஸ்திகம் வெற்றிகாணுமா? அல்லது நாஸ்திகந்தான் வெற்றிகாணுமா?என்று உலகமக்கள் சந்தேகிப்பதற்கான ஒருபயங்கரநிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால், அதர்மமும், நாஸ்திகமும் வெற்றியடைந்ததென்பதும், தர்மமும், ஆஸ்திகமும் தோல்விகண்டதென்பதும்வரலாற்று ஏட்டில் முன்னொருபோதுமே நிகழ்ந்திராத சம்பவங்களாகும். ஓர் காலத்திலே உலகமுழுவதுமே பரந்து பிரஸ்தாபம் பெற்றிருந்த சக்கிராதிபத்தியத்தின் தலைநகரமாகச் சிறந்துவிளங்கிய றோமாபுரி இன்று கிறிஸ்துவேதத்தின் இதயமும். மத்தியதானமுமாக மாத்திரமல்ல, ஆனால், மனிதவர்க்கத்தின் ஆத்மீக நடுநாயகமாகவும் திகழ்கின்றது. அதன் ஒப்பற்றதலைவராய் வத்திக்கான்இராச்சியத்தில் வீற்றிருக்கின்ற பரிசுத்த பாப்பரசரிடம் எந்தவிதமான அணுக்குண்டுமில்லை, ஐம்பது மெகதொன் நீரகக்குண்டுமில்லை. தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை தானுமில்லை. கடவுளால்அருளப்பெற்ற ஆத்மீகபலமல்லாது அவரிடம் உலகபலமென்பது அறவேயில்லை. கிறீஸ்துநாதரின் பதிலாளியாயிருந்து தம்முன்னோரைப்போலவே அவரும் சம்போதுருவானவரின் தாழாத கப்பலென்று சிறப்பித்துக் கூறப்படும் கத்தோலிக்க திருச்சபையை நாஸ்திகமும், அதர்மமும் சண்டவேகத்துடன் எதிர்த்து நானாவிதமான இடுக்கண்கள் விளைவித்தபோதிலும் எவற்றிற்குமே அஞ்சாது வீரத்துவமாகச் செலுத்திப்போகின்றார். பாப்பரசரிடம் படைபண்டாரங்கள் உண்டா என்று ருஷிய சர்வாதிகாரியாகவிருந்த ஸ்ராலின் இறுமாப்புடன்கேட்டார். ஆனால், இன்று அவரின்கதி யாதாயிற்று. அவருடைய கல்லறைமுதலாய் மதிப்பிழந்து போய்விட்டது அவரைப்போலவே இன்றைய ருஷிய சர்வாதிகாரி குருஷேவும் இறுமாந்து பாப்பரசரிடம் அணுகுண்டு, ஐம்பதுமெகதொன்குண்டு உண்டாஎன்று கேட்கலாம். கேட்பாரானால் ஆம்என்றுதான் விடைபகர்வோம். ஆமாம், அவரிடமும், அவரின் ஞானமக்களிடமும் வானவெளிமட்டுமல்ல, பரலோகமட்டுமே செல்லவல்ல செபமென்ற மகாவல்லமையுள்ள அணுக்குண்டு இருக்கிறதுஎன்று காலம் அவருக்குத் தகுந்த விடைபகரும். அழிவுக்குஅகந்தை.விழுகைக்குமேட்டிமை.

● ருஷியசர்வாதிகாரியாய் விளங்கியிருந்த ஸ்ராலின் மாத்திரமல்ல, அவருடைய கல்லறையுமே இன்றைய சோவியற்ருஷியாவில் மங்கிவிட்டது. மஸ்கோநகர செஞ்சதுக்கத்திலே லெனினின் கல்லறையருகே மற்றொருகல்லறையில் கண்ணியமாக அடக்கஞ்செய்யப்பட்டிருந்த அவருடைய பூதவுடல் அங்கிருந்து அகற்றப்பட்டுக் கிறம்ளினின் சுவர்அருகேயுள்ள ஓர்புற்றரையில் இப்போது புதைக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டுச் செய்திகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆசிரியர்களும் சிங்களமும்

இதுவரை ஆங்கில, தமிழ்ப்பரீட்சைகளிலே சித்தியடைந்து நிரந்தரமாக நியமனஞ்செய்யப் பெற்றுள்ள ஆசிரியர்களெல்லாம் மூன்றுவருடகாலத்தில் சிங்களத்திலே நடத்தப்படும் பரீட்சையில் குறிக்கப்பட்ட தராதரத்தை அடையவில்லையானால் சம்பளஉயர்ச்சி கிடையாதென்றும்,சிலவேளை அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படலாமென்றும் தெரிவித்து அறிவித்தல்ஒன்றை வித்தியாதிபதி பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

### இ. போ. சபை நஷ்டம்

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு 1958-ம்ஆண்டு 41இலட்சம் ரூபாவும், 1959-ம்ஆண்டு 1கோடியே 3 இலட்சம்ரூபாவும், சென்ற1960-ம் ஆண்டில் 1கோடியே 5லட்சம் ரூபாவும் நஷ்டமேற்பட்டிருப்பதாகப் போக்குவரத்துச்சபை அதிகாரிகள் தெரிவித்து, சபை இப்போது அறவிடும் பஸ்கட்டணம் உயர்த்தப்படாதவரை ஒருகாலமும் பஸ்போக்குவரத்தால் இலாபம் வரமாட்டாதென்று அரசாங்கபொதுக்கமிற்றிக்கு அறிவித்திருக்கிறார்கள்.

### சாராயமும் அதிக விற்பனவும்

நாடுமுழுவதிலும் தற்போது சாராய விற்பனை 50சதவிகிதம் அதிகரித்திருப்பதாக மதுபரிபாலனபகுதி அறிக்கையிட்டிருக்கின்றது. சென்றவருடம் புரட்டாசியிலே 1இலட்சத்து 8ஆயிரத்து 554கலன்சாராயம் விலைப்பட்டிருக்க, இவ்வருடம் புரட்டாசியிலே 1இலட்சத்து 59ஆயிரத்து 938கலன்சாராயம் — அதாவது 47சதவிகிதம் கூடுதலாக விற்பனையாயிருக்கிறது. அனுராதபுரத்தில்மட்டும் அதன்விற்பனவு 114 சதவிகிதமும், புத்தளத்தில் 94சதவிகிதமும்,ஏனையபகுதிகளில் 50முதல் 60சதவிகிதமும் அதிகரித்துள்ளது.

### பிரயாணத்தைக் குறைக்க வேண்டுகோள்

அரசாங்க ஊழியர்களின் பிரயாண அலவன்ஸ்செலவு குறைக்கப்படுதல் வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதனால் அரசாங்க அதிபர்கள் பிரயாணங்கள் செய்வதை வெகுவாகக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று உள்நாட்டுமந்திரிகாரியாலயம் அவர்களைக் கேட்டுள்ளது.

### மொழிப்பிரச்சினையே காரணம்

அவசரகாலச்சட்டத்தை அகற்றிவிட வேண்டுமென்ற சமசமாஜகட்சியின் பிரேரணை செனற்சபையிலே சென்ற புதன்கிழமை விவாதிக்கப்பட்டபோது, அக்கட்சியைச்சேர்ந்த செனற்றர் சந்திர குணசேகரா பேசுகையில் கூறியதாவது: "மொழிப்பிரச்சினையே இன்றைய அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கக்காரணம். சிங்களம் மட்டும்சட்டத்தை நாம்ஏற்றுக்கொண்டபோதிலும் தமிழ்மொழிக்குரிய உரிமைகளைக் கொடுத்திருந்தால் அவசரகாலச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும்நிலைமை ஏற்பட்டிராது. தமிழ்மக்களுக்கு உரிமைகளைக் கொடுக்காமல் தமிழரசுக்கட்சியிருக்கும்வரை அவசரகாலச்சட்டத்தை நடைமுறையில் வைத்திருக்கப்போகிறீர்களா ? தமிழரசுக்கட்சியினர் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகத் தான் போராடினர். அவர்களுக்கு மொழி உரிமைகளைக் கொடுக்காமல் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது."

## மேற்றிராசனங்கள் தரும் செய்தி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### களுத்துறையில் மரியாயின்சேனையாரின் ஞானவொடுக்கம்

களுத்துறைப்பகுதியில் உள்ள மரியாயின்சேனை—சைனியங்களைச் சேர்ந்த, ஊழிய, உதவி அங்கத்தினர் சுமார் 250பேர், கட்டுக்குருந்தை பரிசுத்த பிலுப்புநேரியார் ஆலயத்தில் தங்கள் வருடாந்த ஞானவொடுக்கத்தைச் செய்தனர். வென்னப்பூவா அமலோற்பவ மரியநாயகி இல்லத்தைச்சேர்ந்த போதகசுவாமிகள் வண. அலோசியஸ் றபாயல் சுவாமியவர்கள் ஞானவொடுக்கப்போதகஞ் செய்தார். ஞானமுயற்சிகளின்போது ஞானப்பிதா அதிவண. கென்றி றெரூட்றிக்கோ சுவாமியவர்களும் கலந்துகொண்டார்.

### வறிய பெண்பிள்ளைகளுக்குத் தொழிற்பயிற்சிநிலையம்

ஸ்ரீலங்கா இளைஞர் சேமநலதொழில் நிலையத்தை நடாத்திவரும் கார்மேல் சபைக்கன்னியர், கத்துபெட எனும் இடத்தில் கடந்தஐப்பசிமாதம் 3-ந்திகதி இன்னுமோர் பயிற்சித்தொழில் நிலையத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர். வறியகத்தோலிக்க சிறுமிகளுக்கும், யுவதிகளுக்கும், தொழிற்பயிற்சியும், பணஉதவியும் அளிக்கப்பட்டுவருகிறது. சீவனஉபாயந்தேட வழியற்றுத் தவிக்கும் எந்தச்சிறுமிக்கும் இங்கு பயிற்சியளிக்கப்படும். இதற்குமனுப்பண்ணப் பாத்தியதை உடையவர்கள் 18வயதுக்கும் 30வயதுக்குமிடைப்பட்ட வயதுடைய பெண்களே. தாய்மொழியில், சிரேஷ்டதாரதமோ, அல்லது கனிஷ்டதாரதமோ உடையவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். தையற்கலையில் நல்லஅறிவும் தகமையும் உடையவர்களுக்கு விசேஷசலுகைகள் உண்டு.

இப்பயிற்சிநிலையத்தில், இருவருடப் பயிற்சிக்காலத்திலும், சமையற்கலை, தையல், சித்திரம், அலங்கரிப்பு கிருஷிகம், பூகட்டுதல் என்னும் கலைகளில் பயிற்சியளிக்கப்படும். பயிற்சியின்பின்பும், அந்நிலையத்தில் தங்கியிருந்து வேலைசெய்பவர்களுக்கு அவர்கள் திறமைக்கேற்ப ஓரளவுபணம் கிரயமாகக்கொடுக்கப்படும். இப்பணம் அவர்கள் திருமணத்தின்போது சீதனமாகச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

இப்பயிற்சி நிலையத்தில், சீவனோபாயத்துக்கான தொழிற்பயிற்சியுடன், சமூக, கலாசார முன்னேற்றத்துக்கான பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சமய—ஆன்மீக விருத்திக்கும், இரட்சணியத்துக்குமடுத்த பயிற்சியே முக்கியகவனத்துடன் அளிக்கப்படுகிறது. அனுதினதியானம், ஞானவாசினை முதலிய ஞானமுயற்சிகள் இடம்பெறுகின்றன. சமயக்கல்வியும் போதிக்கப்படுகிறது.

● ஜப்பானிய மக்களிடையே மதுபானம் அருந்தும்பழக்கம் நாளுக்குநாள் துரிதமாக அதிகரித்துக்கொண்டு வருகிறதாம். சென்றவருடத்திலே அவர்கள்அருந்திய மதுபானப் போத்தல்களை வரிசையாகநிறுத்திவைத்தால் உலகத்தைச் சுற்றிவரக் கூடியதாயிருக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

● பிரித்தானிய பாதுகாப்புமந்திரி திரு. ஹறல்ட் வாற்கின்ஸன் சென்ற ஞாயிற்றுக்கிழமை பேசியபோது: எவராவது எம்மைத்தாக்கினால் அவரை அழித்தொழித்து விடக்கூடிய சக்தி மேற்குநாடுகளிடம் உள்ளதென்ற உண்மையிலதான் சமாதானம் தங்கியுள்ளதென்பதை நினைவில் வைத்திருப்போமாகஎனக் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவின் நினைவு சாலச் சிறந்தது

சாவின் வெளிச்சத்தில்தான் இவ்வுலக வாழ்வு நிலையற்றது எனப் புலப்படுகின்றது. அவலநிலை வெளியாகின்றது. வெற்றி, மகிமை, பட்டம், பவுள்சு இவை நீர்க்குமிழி என நிரூபிக்கப்படுகின்றது. இவ்வுலகதுன்பம் பெரிதாயினும் முடிவுண்டு என எண்ணுவதினால் வாழ்வு எளிதாகின்றது. ஆகவே, சாவின் நினைவு சாலச்சிறந்தது. நித்தியவாழ்வின் வழிதான் சாவு. நிலையற்ற வாழ்வின் முடிவுதான் சாவு.

"சாவு உனக்கு நல்ல உபாத்தியாயராய் இருக்கட்டும்" என அர்ச். அகுஸ்தினார் வசனித்துள்ளார்.

"சாவை நினை; பாவம் செய்யமாட்டாய்" — சர்வ பிர. 7 : 40. எத்தனையோ வேதசாட்சிகளும் அர்ச்சியசிட்டர்களும் சாவைப்பற்றித் தியானித்தார்கள். இவ்வுலக வாழ்வைத் துச்சம் என மதித்தார்கள். நிலையற்ற இன்பங்களைநீக்கி நித்திய இன்பத்தை அடைந்தார்கள். சாவின் நினைவு அவர்களைப் பரிசுத்தத்தில் நிலைகொள்ளச் செய்தது. நல்வழியில் நடத்தும் உபாத்தியாயராக இருந்தது. **அர்ச். போனிபாஸ்** வேதம் போதிக்கப் போன இடத்தில் வெட்டுண்டார். அவர்கையில் அவ்வேளை இருந்தது அர்ச். அம்புரோஸ் எழுதிய சாவின் பிரயோசனம் என்ற புத்தகம்தான்.

கேற்று இருந்தவன் இன்றைக்கு இல்லை என்று கூறக்கூடிய நிலையாமையையே பெருமையாக உடையது இவ்வுலகம்.

**"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல."**

ஒருவேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறியாதவர்கள் வீணில்கட்டும் மனக்கோட்டைகளோ மிகப்பலவாகும் என வள்ளுவர் கூறுகின்றார். இவ்வுலகம் நிலையற்றது என்பதை உணராதவர்களுக்கு,

**"நில்லாதன வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை."**

என்ற குறள்மூலம் விளக்கிக் காட்டுகின்றார்.

"பிறப்புநாளைவிட இறப்புநாள் நல்லது. விருந்துவீட்டுக்குப் போகிறதைவிடத் துக்கவீட்டிற்குப் போகிறது நல்லது. ஏனெனில், இழவு வீட்டிலே எல்லாருக்கும் முடிவு உண்டென்றும், கடைசியாகத் தன் சரீரம் அடையும் சம்பவனை இதுதான்என்றும் காணப்படுவதால் உயிருடன் இருப்பவன் தனக்குச் சம்பவிக்க இருப்பதைச் சிந்திப்பான்" என்று சலமோன் ஞானி வசனித்துள்ளார்.

நமது பரிசுத்த மாதாவாகிய திருச்சபையும் நமக்குச் சாவின் நினைவை ஊட்டி நம்மை நல்வழியில் நடக்கச் செய்கின்றது. "மண்ணால் உண்டாக்கப்பட்டாய், உனது சரீரம் மீண்டும் மண்ணாகும்" என்ற உண்மையை விபூதித்திருநாளன்று எமக்கு எடுத்தோதுகின்றது. நமது கர்த்தரின் பாடுகள், மரணம் இவற்றின்மூலமும் நாம் நிலையற்ற உலகைநீக்கி, நித்திய பேரின்பவீட்டின் பாதையில் நடக்கச் செய்கின்றது. மரித்த ஆத்துமாக்களுக்கென ஒரு மாதத்தை ஒதுக்கி, மணணிலுள்ளார் சாவைப்பற்றி நினைக்கவும் சிந்திக்கவும் வழிசெய்கின்றது. ஏன்? மண்ணுலகில் எழுப்பப்பட்ட ஒவ்வோர் கல்லறையும் தனித்தனி சாவைப்பற்றி நமக்குக் கதைகூறிநிற்கின்றனவே.

நிலையற்ற இவ்வுலக இன்பத்தில் திளைத்துக் கவலையற்ற மனிதனாய் வாழும் மானிடனே! நீ சாவைப்பற்றிச் சிந்தித்ததுண்டா? ஏன், சிந்திக்கப் பயமாக இருக்கிறதா? நீ கரடுமுரடான வாழ்க்கைப்பாதையிலே பலன் அற்றபதராக வாழ்ந்ததுதான் இதற்குக்காரணம். மண்ணில் பிறந்த ஒருவனும் சாவுக்குத் தப்பமுடியாது. அன்பனே! சாவைப்பற்றி நினை. சிந்தனைக்குச் சிறு இடம் கொடுத்து உன் நடத்தைகளை மாற்று. சாவைப் பற்றிய சிந்தனைகளே உன்னை நல்வழியில் நடத்தக் கூடியனவாக இருக்கும். நமது திவ்விய இரட்சகரும் பின்வரும் உவமைமூலம் சாவின்நினைவை எமது மனதில் எழுப்பியுள்ளார்.

ஐசுவரியமுள்ள ஒருவனின் காணிபூமி ஏராளமான பலனை அவனுக்குக் கொடுத்தது. அவன் தானியங்களைக் களஞ்சியங்களில் சேர்த்து வைத்துவிட்டு, "என் ஆத்துமமே அநேக வருடங்களுக்குப் போதிய சம்பத்துக்கள் உனக்குச் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன; ஆகையால், நீ இளைப்பாறி உண்டு உடுத்து விருந்தாடு" என்றான் (லூக். 12 : 16). அப்போது சருவேசுரன் அவனை நோக்கி, "மூடனே! இந்தஇராத்திரியில்தானே உன்உயிரை உன்னிடத்தில் நின்று வாங்குவார்களே; அப்போது நீ தேடியவை யாருடையனவாகும்?" என்றார். சருவேசுரனிடத்தில் திரவியவானாய் இராமல், தனக்குப் பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்கிறவன் இவ்விதமாய் இருக்கிறான் (லூக். 12 : 21).

சாவின் நினைவில் சடுதி மனமாற்றம் அடைந்தவர்கள் எத்தனைபேர், அவர்கள் அடைந்த நன்மைகள் எத்தகையவை என்பதைப் பல புனிதர்களின் சரித்திரங்களே எடுத்துக்காட்டி நிற்கின்றன.

**"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை**
**என்றெண்ணி**
**இன்னினியே செய்க அறவினை**
**— இன்னினியே**
**நின்றான் இருந்தான் கிடந்தான் தன்**
**கேள்அலறச்**
**சென்றான் எனப் படுதலால்."**

யாக்கை நிலையாமையென்பது புல்நுனியில் நிற்கும் நீர்த்துளி போன்றது என்று கருதி இப்பொழுதே அறச்செயல்களைச் செய்க; ஏனென்றால், இப்போதுதான் ஒருவன் இங்கு நின்றான், இருந்தான், படுத்துறங்கினான், பின் தன் சுற்றத்தார் அலறி அழ இறந்துவிட்டான் என நிலையாமை கூறப்படுவதால். ஆம், யேசுவின் வீரத்தியாகிகள் அவரின் அடிச்சுவட்டைத் தவறாது பின்பற்றுவதற்கும், கோடாகோடி இன்பத்தைத் தேடிப் பெற்றாலும் இவையனைத்தும் ஈடாகாத மோட்ச பேரின்பத்தை அடைவதற்கும் சாவின் நினைவே அவர்களுக்குப் பெருந்துணை புரிந்தது எனக் கூறல் மிகையாகாது. "சாவை நினை; தீய வழியில் செல்லமாட்டாய்." சாவின் நினைவே உனக்கு நித்தியபேரின்ப வழிகாட்டியாக அமையட்டும்.

**ஆசிரியர், ச. அமிர்தநாதர்.**

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

கடும் நோயினால் பீடிக்கப்பட்டு மரண ஆபத்திலிருந்த ஒருவர் அர்ச். யூதாததேயுவின் மன்றாட்டினால் பூரண சுகமடைந்து வருகிறார். இதை வாசிக்கும் அன்பர்கள் எல்லோரும் அர்ச். யூதா ததேயுபெற்றுத்தந்த சலுகைக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

பக்தன்

* * *

யேசுவின் திருஇருதயத்தினதும், பரி. சதாசகாயமாதாவினதும் விசேஷ உதவியினால் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டுக்கள் நிறைவேறியுள்ளதையிட்டு நன்றி தெரிவிக்குமுகமாக இதைப் பிரசுரிக்கிறேன். காலதாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

'விசுவாசி'

* * *

பரலோக பூலோக இராக்கினியே! பாழடைந்த கணவாயில் புதிதாய்உதித்த நம்பிக்கையின் வானவில்லே! அண்டினோரை அரவணைத்த அமல அன்னையே! சதாசகாயமாதாவே! உமது இராக்கத்தாலும், பரிசுத்த 12-ம் பத்திநாத பாப்பரசரின் மன்றாட்டாலும் நான் கேட்டுக் கொண்ட விண்ணப்பங்களைப் பூரணமாகப் பெற்றுக்கொண்டேன். உங்கள் புகழ் எத்திசையும் பரம்பச்சடவது. பிரசுரிக்கத் தாமதித்ததையிட்டு மன்னிப்புக் கோருகிறேன்.

ஜே சி.

## "உத்தரிப்புஸ்தலத்தின் வேதனைகளுக்கு நீ தப்பித்துக்கொள்ளும்படியாக..."

என்றாவது ஒருநாள் நாம் இவ்வுலகைவிட்டுப் பிரிவோம். அதன் பின் நாமும், நமது பாவங்களின் அநித்திய ஆக்கினைகளுக்காக உத்தரிக்க உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செலவோம். அங்கிருந்து நாம் செய்யும் செபங்கள் நமக்கு விடுதலை பெற்றுத்தரச் சக்தியற்றவையாய் இருக்கும். அங்கு சென்றபின் திவ்வியபூசை காணும் சந்தர்ப்பம் எமக்குக் கிட்டாது. இன்று இவ்வுலகில் நம்முடன் கூடி உறவாடுவோரிலும் அநேகர் நாம் மரித்தபின்




நம்மை மறந்துவிடுவார்கள். உத்தரிப்பு ஸ்தலத்தில் நாம் கழிக்கவேண்டிய நாட்களின் தொகையை நாம் அறியமாட்டோம். மோட்சத்திற்குச் செல்லுமுன் நாம் அங்கு செல்வோம். அங்கு நாம் அனுபவிக்கவேண்டிய வேதனை எப்படிப்பட்டது என்பதை மட்டும் நாம் அறிந்திருக்கிறோம்.

அன்பொழுகப் பழகி, அறிவு புகட்டித் துயர்களைந்து மகிழ்வூட்டிய எத்தனையோ அன்புள்ளங்கள் அங்கு அக்கினியாற்றில் நீந்துகின்றன. இங்குள்ள எவராலுமே நினைவுகூரப்படாதவர்களாய் அனாதரவானநிலையில் அங்கு வேதனைப்படும் ஆன்மாக்கள் அநேகமுண்டு.

**"அக்கினியையே புசித்து**
**அதையே குடிக்கிறோம்**
**எக்கணமும் தீக்கடலில்**
**ஏங்கி விழ்ந்து நீந்துகிறோம்**
**கொடியஇத் தீயை நூர்க்கக்**
**கொஞ்சம் செபம் செய்யுங்கள்**
**நெடியஇவ் வாதை நீங்க**
**நித்தம் பூசை காணுங்கள்."**

என்று அவர்கள் நித்தமும் எழுப்பும் சோகக்குரலுக்கு இம்மாதத்திலாவது செவிகொடுப்போம். நாமும் ஒருநாள் இதே சோகக்குரலையெழுப்பி உலகோரைக் கெஞ்சவேண்டி நேரிடும். உத்தரிப்பு ஸ்தலத்தில் நம் வேதனைகளைக் குறைக்கக்கூடியதாய் நாம் இங்கு இருக்கும்பொழுது அங்கு இப்பொழுது வேதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்காக நம்மால் இயன்ற செபதப உதவிகளைச் செய்வோமாக.

மேலும் உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ளவர்களுக்காகச் செபிப்பது கிறீஸ்துநாதருக்கு மிகவும் பிரியமுள்ள பிறர்சிநேகக் கிரிகையாகும். ஏனெனில், கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரமாகிய சத்திய திருச்சபை,

1. போராடும் திருச்சபை (உலகோர்)
2. வேதனைப்படும் திருச்சபை (உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ளோர்)
3. வெற்றிபெற்ற திருச்சபை (மோட்சவாசிகள்)

என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. போராடும் திருச்சபையுடன் தாம் என்றும் இருப்போமென வாக்குப்பண்ணியவரும், வெற்றிபெற்றோரை மகிமைப்படுத்திச் சம்பாவனை அளிப்பவருமாகிய கிறீஸ்துநாதர் வேதனைப்படும் ஆன்மாக்களுக்காக நாம் செபிக்கும்பொழுது இறும்பூதெய்தி நம்மை ஆசீர்வதிப்பார். அக்கினியின் அகோரத்தால் வெந்து துடிக்கும் நம் சோதரருக்காக மன்றாடுவதை நாம் அசட்டை செய்வோமானால் தேவன் நம்மையும் ஓர் நாள் அதே நிலைக்குள்ளாக்கிப் பிறர் உதவிக்காக நாமும் ஏங்கும்படி செய்வார் என்பதைச் சில உண்மையான சம்பவங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

## திருமதி மேரிப்பிள்ளை மாட்டீன் அவர்களின் தேகவியோகம்

யாழ்நகர் வாசராயிருந்து காலஞ்சென்ற திரு. எஸ். ரி. மாட்டீன் அவர்களின் பிரியமனைவியாரான திருமதி மேரிப்பிள்ளை மாட்டீன் விருத்தாப்பிய நோய்கண்டிருந்து சென்ற 21-10-61 சனிக்கிழமை யாழ்ப்பாணம், பெருந்தெருவிலுள்ள தனது மருகர் திரு. எஸ். திருச்செல்வம்அவர்களின் இல்லத்தில் காலஞ்செல்லலாயினர். இவருக்கு ஒரு புத்திரியும், ஒரு புத்திரரும், அநேகபேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளும் உள்ளனர். புதல்வி திருமதி சவினா திருச்செல்வம். புதல்வர் திரு. சிறில் மாட்டீன். மன்னார் அரசாங்க அதிபரின் பாரியாரான திருமதி தெரேசா ஜெகநாதன் இவரின் பௌத்திரியாவர். இவரின் பிரேதசேமம் மறுநாள்சாயந்தரம் குருமாரும், இனசனரும், அன்பர்களுமாகப் பெருந்திரளானோர் கூடியசமூகத்திலே சிறப்பாக நடந்தேறியது. இவரைஇழந்து தின்புறும் புதல்வி, புதல்வர், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

**R. I. P.**

## டபிள்யூ. எஸ்தாக்கி லோவ்அவர்களின் *10-ம் வருட ஞாபகம்*

**தோற்றம் : 26-3-1893** **மறைவு : 21-11-1951**

போளவத்தை, தமிழ் ஆண்பாடசாலையில் 35 ஆண்டுகளாகத் தலைமையாசிரியர் பதவியில் அயராது உழைத்து அளப்பரிய சேவைபுரிந்த

**டபிள்யூ. எஸ்தாக்கி லோவ்**
ஆசிரியரவர்கள்

பரமபதமடைந்த 10-வது வருடம் 21-11-61 உடன் பூர்த்தியாகின்றது. அத்தினம் எம் அன்பின் அஞ்சலியை அன்னவர்க்கு அர்ப்பணித்து, அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை இறைஞ்சும்படி, இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங்.சகோதர-சகோதரிகள், பழையமாணவர்கள், பந்துமித்திரர், விசுவாசிகள் அனைவரையும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

பத்தாவை இழந்த பாரியார்
டபிள்யூ. மற்றில்டா பர்னான்டோ

மக்கள்
டபிள்யூ. அனக்கிளீற்றஸ் வெனடிக்லோவ்
டபிள்யூ. ஜோண் யோசவ் லோவ்

உடன்பிறந்தோர்
டபிள்யூ. செலஸ்டீன் லோவ்
டபிள்யூ. எலியாஸ் லோவ்
சங். சிஸ். மேரி அடெலா

அங்கம்பிட்டி வாய்க்கால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## நேர்த்திக்கடன்

யோண் கிளிக்கூண்டைப் பார்த்தான். அவனுக்குப் பகீரென்று இருந்தது. தான் அன்பாய்—ஆசையாய் வளர்த்த கிளியைக் காணவில்லை. கூண்டு திறந்து கிடந்தது. அறை முழுவதும் தேடினான். ஜன்னலண்டை சென்று வெளியே எட்டிப் பார்த்தான். எங்கும் கிளியைக் காணோம். யோணுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

பக்கத்திலுள்ள கோவிலுக்கு அவசர அவசரமாகச் சென்றான். அங்கே அந்தோனியாரின் திருச்சுரூபத்திற்கு முன்பாக முழங்காலிலிருந்து, "அந்தோனியாரே! நீர் செய்த சகல உபகாரங்களுக்கும் நன்றி கூறுகிறேன்; நான் ஆசையோடு வளர்த்த கிளியை என்னண்டை வரப்பண்ணும்; சிறுவர்களிடமோ, பூனையிடமோ அகப்படாமல் அதைக்காப்பாற்றி என்னிடத்தில் சேரப்பண்ணும்; கிளி எனக்குக் கிடைக்குமானால், ஒருரூபாவுக்கு 'பணிஸ்' வாங்கி இந்த ஏழைச் சிறுவர்களுக்கு வழங்குவேன்" என்று பிரதிக்கினைசெய்தான். சோர்ந்த மனத்தோடு கோவிலைவிட்டு வெளியேவந்து வழிநடந்தான்.

"யோண்!" யாரோ அவனை அழைத்தார்கள். நிமிர்ந்து பார்த்தான். அவன் காண்பது நிஜமா? என்ன ஆச்சரியம்! அவனது வகுப்புத்தோழன் விக்றர் நின்றுகொண்டிருந்தான். அவன்கையில் ஒருகிளி. "யோண்! இது உன்னுடைய கிளிதானே!" என்று கேட்ட விக்றரிடம் "ஆமாம்; என்னுடையதுதான்; எப்படி நீ பிடித்தாய்?" என்று பதில் வினவை ஆவலோடு கேட்டான் யோண்.

"அதோ! அந்த மரக்கிளையில் நின்றுகொண்டிருந்தது; அதன் காலில் கட்டியிருந்த நீல நாடாவின் மூலம் அது உன்னுடையது என்று தீர்மானித்தேன்."

"நன்றிநண்பா." அவனிடமிருந்து விடைபெற்றான் யோண். அவன் உள்ளம் உவகையால் நிறைந்திருந்தது. ஆனால், உவகை அதிகநேரம் நீடிக்கவில்லை. திடீரென்று கிளி அவனது கையிலிருந்து கிளம்பிப் பறக்கத்தொடங்கியது. ஒருகணம் யோணின் முகம் ஏமாற்றத்தால் வாடியது. மறுகணம் கிளியைப் பின்தொடர்ந்து ஓடினான். அதோ! ஒரு கடைக்குள் கிளி புகுந்தது. தொடர்ந்து ஓடிய யோண் கடைக்குள் சென்று கிளியைப் பிடித்தான். அது ஒரு கோதுமை அப்பக் கடை. யோணுக்குச் சட்டென்று தனது நேர்த்திக்கடன் ஞாபகத்திற்கு வந்தது. உடனே ஒரு ரூபாவுக்கு 'பணிஸ்' வாங்கினான். நண்பன் விக்றரிடமிருந்து கிளியைப் பெற்றவுடன் நேர்த்திக்கடனை மறந்துவிட்டேன்; அதை ஞாபகப்படுத்துவதற்காகவே அந்தோனியார் இவ்விதம் வழிநடத்தியிருக்கிறார் என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டு கோவிலுக்குத் திரும்பினான். அங்கே நின்ற ஏழைச் சிறுவர்களுக்குத் தான் கொண்டுவந்திருந்த 'பணிஸ்'களை எடுத்துக்கொடுத்துவிட்டுச் சந்தோஷத்தோடு வீடுதிரும்பினான் யோண்.

அன்புத் தம்பி, தங்கையரே!

இந்தமாதம் உத்தரிப்பு ஸ்தலத்திலே வேதனைப்படுகிற ஆத்துமாக்களுக்காக விசேஷவிதமாகச் செபிக்கும்படி திருச்சபை கேட்கிறது. உத்தரிப்பு ஸ்தலத்திலே உங்கள் அப்பா, அம்மா, பேரன், பேத்திமார், உங்கள் உறவினர், சிநேகிதர், உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்கள் இருக்கக்கூடும். அவர்களுக்காக நீங்கள் மன்றாடக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். இவர்களுக்காக மாத்திரமல்ல, பூலோகத்திலே எவராலும் நினைக்கப்படாத, அந்தரித்த ஆத்துமாக்களும் உத்தரிப்பு ஸ்தலத்திலே இருக்கிறார்கள். அங்கு கிடந்து மோட்சம் போகத் துடிக்கிறார்கள். அவர்களுக்காகவும் மன்றாடுங்கள். உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படுபவர்களுக்காக நாம் மன்றாடினால் அவர்களும் எங்களுக்காக மன்றாடுவார்கள். நாங்கள் நல்ல மரணமடைய, மோட்சம் சேரத் துணை செய்வார்கள்.

அன்புள்ள அண்ணா.

நான்விரும்பும் அர்ச்சியசிட்டர்

## அர்ச். சியேனா கத்தரீனம்மாள்

அர்ச். கத்தரீனம்மாள் இத்தாலியிலுள்ள சியேனா என்னும் பட்டணத்தைத் தனது சென்ம பூமியாகக் கொண்டவள். சிறுவயதிலிருந்தே கன்னிமையைத் தனது உயிரினும் மேலாக நேசித்து வந்தாள். இந்த அம்மாள் தேவசிநேகத்திற்கோர் சின்னம்; தவத்திற்கோர் மாதிரிகை; அடக்கவொடுக்கத்தின் அழியாப் பொக்கிசம்; விவேகத்தின் பிறப்பிடம். தேவ அன்னையைச் சிநேகிப்பதில் சிறுவயதிலிருந்தே அவளிடம் ஒரு தனி ஆவல் சுடர்விட்டுப் பிரகாசித்தது. தேவ அன்னையின் கற்புநெறியைத் தன்னிலேயும் பிரதிபலிக்கச் செய்தாள் இந்த அம்மாள். கற்பின் கண்ணாடியாய், மாசற்ற லீலிமலராய்க் குற்றமறியாத கொழுஞ்சுடராய் இந்தமாது தனது வாழ்நாளைக் கழித்தாள். ஏழாவது பிராயத்திலே தனது கன்னிமையைச் சருவேசுரனுக்கு அர்ப்பணித்தாள், தனது கற்பெனும் மாணிக்கத்திற்குப் பங்கம் நேரிடாவண்ணம் தனது உடலழகைச் சிதைத்து, அழகிய கூந்தலைக் கத்தரித்தாள். இச்செயலால் பெற்றோரின் அன்பை இழந்து ஓர் ஊழியக்காரி போலானாள். 18-ம் வயதிலே துறவற அந்தஸ்தைத் தெரிந்து அர்ச். சாமிநாதரின் மூன்றாம் சபைக்குள் நுழைந்தாள். அரோசிகத்திற்குரிய நோயாளிகளை அன்புடன் பராமரித்தாள். அதற்கு அவளுக்குக் கிடைத்தது நன்றியின்மையும், பழிச்சொல்லுமே. இவற்றால் சிறிதேனும் தனது புண்ணிய நிலையில் குன்றினாலல்லள், பொறுமையை இழந்தாளல்லள். மனிதர் மட்டுமா அவளுக்கு இன்னல்களை வருவித்தார்கள்? இல்லை, இல்லை; புண்ணியத்தில் வளரும் கத்தரீனம்மாளின் நிலை பசாசிற்கும் பிடிக்கவில்லை. அநேக புதுமைகளைச் சரமாரியாகப் பொழிந்தாள். யேசுநாதர் அவளுக்கு ஒருமுறை காட்சி கொடுத்து, பொன்முடி ஒன்றையும், முண்முடி ஒன்றையும் காட்டி, "தெரிந்துகொள்" என்றார். கத்தரீனம்மாள் முண்முடியைப் பற்றினாள். சிரசில் பதித்தாள். இரத்தம் கசிந்தது. ஆனந்தமடைந்தாள். யேசுநாதர் அந்த அம்மாளை 30-ம் பராயத்திலே தம்மிடம் அழைக்கச் சித்தமானார். தனக்கு வாக்களித்திருந்த மோட்சமுடியைப் பரிசாகப்பெற்று இன்று ஓர் அர்ச்சியசிட்டவளாகத் திகழ்கின்றாள்.

ம. மரியமலர்,
தாளையடி.

## சிறுவர் அறிவுச் சக்கரம்—8

முடிவு தேதி 20-11-61

— I —

1. யூதாசிடமாக அப்போஸ்தலர்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் யார்?
2. இந்தியாவில் வாளால் வெட்டிக் கொல்லப்பட்ட அர்ச்சியசிட்டர் யார்?
3. பங்குக்குருவர்களின் பாதுகாவலர் யார்?
4. கார்மேல் உத்தரியத்தைத் தேவ தாயார் யாருக்குக்கொடுத்தார்?
5. வேதபோதக நாடுகளின் பாதுகாவலராகத் திருச்சபை யாரை நியமித்திருக்கிறது?
6. "அமெரிக்காவினது விசுவாசத்தின் மலர்" என அண்மையில் 23-ம் அருளப்ப பாப்பரசரால் அழைக்கப்பட்டவர் யார்?

— II —

1. பிதாப்பிதாவான யாக்கோப்பினுடைய புத்திரரில் யாருடைய கோத்திரத்தில் யேசுநாதர் பிறந்தார்?
2. கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதன்முதல் எந்த இடத்தில் வழங்கப்பட்டது?
3. பழையஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுள் மிகக் கீர்த்திவாய்ந்தவர் எனக் கருதப்படுபவர் யார்?
4. பழையஏற்பாட்டின் கடைசி நூல் யாது?
5. பழையஏற்பாட்டிலே உப்புச் சிலையாகச் சபிக்கப்பட்டது யார்?

**சிறுவர் அறிவுச் சக்கரம்—7**

பிரவேசப் பத்திரம்

பெயர்:.....................

.....................

வயது:.....................

விலாசம்:.....................

.....................

குறிப்பு: போட்டிக்குரிய விடைகள் யாவும் 20-11-61-க்குப் பிந்தாமல் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பப்படவேண்டும். முடிவு தேதிக்குப்பின், அல்லது பிரவேசப் பத்திரமின்றி அனுப்பப்படும் விடைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

## சீனச் சிறுமியின் பிறர்சிநேகம்

சீனாதேசத்திலே ஒரு மிஷனரிய குருவானவர் கிறிஸ்துவின் இராச்சியத்தைப் பரப்புவதில் தம் உடல் பொருள், ஆவி மூன்றையும் செலவழித்தார். ஒருநாள் அவர் தெருவழியே சென்றுகொண்டிருந்தார். அப்போது 8 வயதுடைய சிறுமி ஒருத்தியைச் சிலர் கூடிநின்று துன்புறுத்திக்கொண்டிருந்தனர். குஷ்டரோகம் பிடித்த அச்சிறுமி வருந்துவதைக் கண்ட இந்த மிஷனரிய குருவானவர் அவளைத் தனது கைகளினால் தூக்கித் தனது தோளிலே சுமந்துகொண்டுபோய் ஒரு பாதுகாப்பான இடத்தில் சேர்த்துவிட்டார்.

அச்சிறுமி இக்குருவானவரை நோக்கி, "என்மட்டில் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறீர்கள்" என்று கேட்டாள். அதற்கு அக்குருவானவர், "மகளே! என்னையும், உன்னையும் படைத்த சருவேசுரனுக்காக இதைச் செய்கிறேன்; சருவேசுரன் நேசமுள்ள நமதுபிதா; நாம் அவரது பிள்ளைகள்; எனவே, நாம் சகோதரர். இவ்வுலகில் உள்ளவர்கள் எல்லோரும் சகோதரர்கள்; நம்மைப்போல நல்லவர்களும் உளர், தீயவர்களும் உளர்; அவர்களும் நமது சகோதரரே; எனவே, நாம் ஒருவர் ஒருவரை நேசிக்கவேண்டும்" என்றார்.

இதைக்கேட்ட சிறுமியின் உள்ளத்தில் ஞானம் உதயமாயிற்று. மற்றவர்களை நேசிக்கவேண்டும் என்ற நல்ல எண்ணம் வேரூன்றியது. இவள் மூன்றுவருடங்கள் அக்குஷ்டரோகிகள் விடுதியிலே சீவித்தாள். சின்னஞ்சிறியவளான இவள் மற்ற எல்லாக் குஷ்டரோகிகளையும் நேசித்தாள். அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தாள். கிறிஸ்துவின் நேசத்தைப்பெற்ற இச்சிறுமி மூன்றுவருடங்களின்பின் மரித்தாள். அப்பொழுது சனங்கள், "மோட்சத்தின் ஒரு துண்டு திரும்பவும் மோட்சத்துக்கே போய்விட்டது" என்றனர்.

— எஸ். எம். ஜே.

நண்பர்களே! நாமும் ஏதாவது நேர்த்திக்கடன் வேண்டுதல் செய்திருந்தால், எப்பாடுபட்டாவது அதைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும் என்பதை மறவாதீர்கள். தீர்க்கமுடியாத நேர்த்திகளைச் செய்யக்கூடாது தெரியுமா?

— தா. பி. சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பக்கம்

# தேம்பாவணி—நாட்டுப்படல விளக்கவுரை

### நானிலச் சிறப்புக்கள்

(முன்தொடர்ச்சி)

(வித்துவான்: ச. சி. ஞானப்பிரகாசம்)

**வரைகிடந்தசை வீயுமிழ் மதுவினூற்பெருகி**
**நிரைகிடந்தெழுஞ் சோலையுங் களனியும் நிறைப்ப**
**வரைகிடந்திழி வளம்புனல் எங்கணு முலவல்**
**இரைகிடந்துயிர் சேர்த்துறுப் புலாவிய போன்றே**

(இள்) குறிஞ்சி நிலத்தினின்று இறங்கிய வளமுள்ள நீரின்வெள்ளமானது முல்லைநிலத்திற்கிடந்த மதுமலர்கள் அசைந்து சொரிந்த தேனால் மேலும்பெருகி ஓடி, மருதநிலத்தில் வரிசையாக வானுறவோங்கிநின்ற சோலைகளையும், வயல்களையும் நிறைத்து எல்லாவிடங்களிலும் ஓடியதன்மையானது, தேகத்தில் தங்கியிருக்கும் உயிர், குடிக்கும்நீரினால் சிறப்புற்று அவயவங்களெங்கும் செறிந்து பரவியதைப் போன்றிருந்தது.

ஆறு உவமேயம், உயிர் உவமானம் எங்கும்சென்றுபரவுதல் பொதுத்தன்மை, சோலைகளுக்கும், வயல்களுக்கும் அவயவங்கள் உவமை. குறிஞ்சிநிலத்தினின்று இறங்கிய வெள்ளமானது முல்லைநிலத்தில் மேலும்அதிகமாகப் பெருகி ஓடக்காரணம், முல்லைநிலத்தில் விழுந்துகிடந்தமலர்கள் அசைந்ததினாற் பெருகிய தேன்பெருக்கே என்பார் "விரைகிடந்தசை வீயுமிழ் மதுவினாற் பெருகி" என்றார். ஆற்றுவெள்ளம் சோலைகளையும், களனிகளையும் நிறைப்பதே அந்நாட்டில் வளம்பெருகக் காரணம்என்பார் "வரைகிடந்திழி வளம்புனல்" என்றார். சோர்ந்துகிடந்த உடல் குடிநீரினால் உற்சாகமுற்று வளம்பெறுவது போலவே, வளங்குன்றிக்கிடந்தநாடு ஆற்று வெள்ளத்தால் வளம்பெற்றுச் செழிப்புறும் என்பார் "வளம்புனல் எங்கணும் உலவல் திரைகிடந்துயிற் சீர்த்துறுப் புலாவிய போன்றே" என்றார்.

ஆறு பெருக்கெடுத் தோடும்போது முல்லைநிலத்து மதுமலர்களை அசைத்து அடித்துக்கொண்டோடுதல் வழக்கம். இதனை,

"பூ நிரைத்துமென் தாது பொருநதியும்
தேனளாவியும்"— கம்பரா, ஆற்று 8

எனக் கம்பர் கூறுதலானும் அறிக.

"தாதுகு சோலைதோறும் சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கைதோறும் புதுமணத் தடங்கள்தோறும்
மாதவி வேலிப்பூக வனந்தொறும் வயல்கள்தோறும்
ஓதிய வுடம்புதோறும் உயிரென உலாயதன்றே"

—கம்பரா, ஆற்று 20

என ஆற்றுவெள்ளம் சோலைகளிலும், காடுகளிலும், வனங்களிலும், வயல்களிலும் சென்றுபரவுதல், உடம்பினுள் உயிர்சென்று உலாவுதலை ஒத்ததுளனக் கம்பரும் எடுத்தாள்வது காண்க.

**அஞ்சி லாவெதி ரடுக்கிய கல்லெலாங் கடந்தே**
**எஞ்சி லாவெழில் இமைத்தநீள் மருதமும் நீக்கித்**
**துஞ்சி லாநதி தொடரகல் கருங்கடல் நோக்கல்**
**விஞ்சை யாரெலாம் வெறுத்துவீ டிவறிய போன்றே**

(இள்) குறிஞ்சி நிலத்தினின்று ஓயாமல்ஓடுகின்ற இவ்வருவியானது, சிறிதும் அஞ்சாமல், குறிஞ்சிநிலத்தில் தனக்குஎதிரில் அடுக்கப்பட்ட கற்களையெல்லாங் கடந்துசென்று, குறைவற்ற செல்வத்தோடு விளங்கிய விசாலமான மருத நிலத்தையும், ஆங்குள்ள செல்வத்தையும் விரும்பாமல் விட்டுவிட்டு, நெய்தல் நிலம்புகுந்து அங்குள்ள அகன்ற கருங்கடலைநோக்கிச் செல்வதானது, அறிவுடையோர் இவ்வுலக செல்வங்கள் யாவற்றையும் வெறுத்து மோட்சமொன்றையே நாடிச்செல்வதை ஒத்திருந்தது. கடல்நீர் இறைவனுக்கும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்என்னும் நானிலங்களும் அறம், பொருள், இன்பம், வீடுஎன்னும் நாற்பொருள்களுக்கும் உவமையாகும். ஆறு கருங்கடல் நோக்கல்போல, அறிவுடையோரும் வீட்டுலகையே நோக்குதல்பற்றி ஆற்றிற்கு அறிவுடையோரை உவமைகூறினார். இந்நதியானது சிறிதும்அஞ்சாமல் எதிரில் அடுக்கப்பட்ட கற்களையெல்லாம் தாண்டிச்செல்வதுபோல, அறிவுடையோரும் எதற்கும் அஞ்சாத மனத்துணிவுடன் உலகம், சரீரம், பசாசுஎன்னும் சத்துருக்களால்வரும் சோதனைகளை மேற்கொள்வர். இந்த ஆறானது, குறைவற்ற செல்வத்தோடுவிளங்கிய அகன்ற மருதநிலத்தையும், ஆங்குள்ள அழகையும் விரும்பாமல், அதைவிட்டு அப்பாற்செல்வதுபோல, அறிவுடையோரும் இவ்வுலக செல்வம், அழகு, புகழ் முதலியவற்றின்மேற் பற்றுதல்வையாமல், தாமரை இலையின்மேற் தண்ணீர்போல நடப்பர். ஆறு, ஈற்றில் கருங்கடலையடைந்து, கடல்நீருடன் இரண்டறக் கலந்துபோதல்போல அறிவுடையோரும் வீட்டுலகையடைந்து, இறைவனது பேரின்பவெள்ளத்திற்கலந்து என்றென்றும் இன்பம் நுகர்வர் என்னும் குறிப்புப்பொருள்கண்டு இன்புறுக.

கடல்நீராலுண்டாகிப் பூமியில்விழுந்த மழைநீர் ஆறாகப்பெருகி, குறிஞ்சி, முல்லை, மருதங்கடந்து இறுதியில் நெய்தல்நிலத்தையடைந்து கடலிற்கலப்பது போல, இறைவனால்உண்டாகிய மனிதஉயிரும் இவ்வுலகில் குழவியாய்ப்பிறந்து, மனிதனாய்வளர்ந்து அறம், பொருள், இன்பங்கடந்து இறுதியில் இறைவனின் வீட்டுலகையடைந்து இறைவனுடன் பேரின்பம் அனுபவிக்கும் என்னும்பொருளும் தோன்றுதல் காண்க. இவ்வளவு பொருள்களையெல்லாம் இச்சிறுபாட்டில் அழகுறஅமைத்துவைத்த வீரமாமுனிவரின் உவமைத்திறங்கண்டு இன்புறுவோமாக.

"கல்லிடைக் கலந்துபோந்து கடலிடைக் கலந்தநீத்தம்"

— கம்பரா, ஆற்று 19.

என்றார் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் என்க.

விஞ்சை: அறிவு, விஞ்சையோர் அறிவுடையோர்.

"அணங்குறு மவிஞ்சைகெட விஞ்சையினகம்பாடு"

— கம்பரா, கோலங் 39.

இவறல்: பேராசையுறல்

"கொலைகடிந்திவறலின்றி" — சீவக 25, 83.

**மலையி னேரறல் மலியநால் திணை அருந் தியபின்**
**அலையி னேருறல் அவனிதன் மகர்க்கெலாம் ஊட்டி**

**முலையி னேருநீ இ விஞ்சுபால் முடுகலில் உடுத்த**
**கலையி னேருநீ இக் களிப்பொடு சிந்துவ போன்றே**

(இள்) மலையினின்றும் புரண்டுவரும் வெள்ளநீரை நானிலங்களும் நிறையக் குடித்தபின்பு மிகுதியானநீர் கடலிற்போய்ச்சேருந் தோற்றமானது, பூமிதேவியானவள் தன் முலைப்பாலைத் தனது மக்களுக்கெல்லாம் நிறைய உண்பித்தபின்பு, மிஞ்சியபால் அம்முலையினின்றும் பெருகிஒழுகி, அவளுடுத்தசேலையிற் சிந்துவதைப் போன்றிருந்தது

மலை பூமிதேவியின் முலைக்கும், மலையினின்று ஓடிவரும் ஆற்றுவெள்ளநீர் முலைப்பாலுக்கும், நானிலங்களுக்கும், பல்வேறுமக்களுக்கும், கடல் பூமிதேவியின் நீலஆடைக்கும் உவமைகளாகும். தாய் தன்குழவிக்கு நிறையப் பாலூட்டியபின் மிஞ்சியபால் அவளது ஆடையிற்சிந்துகின்றது. அதுபோல, மலையினின்றுபெருகிய ஆற்றுநீரை நானிலங்களும் நிறையக்குடித்தபின் மிகுதியானநீர் கடலிற்சென்று கலக்கின்றது. ஆ! என்ன அழகான உவமை. தாயின் முலைப்பால் குழந்தைகளை வளர்த்தல்போல, ஆற்றுநீரை நானிலங்களும் குடித்துச் செழிப்புடையதாகி, உணவுப்பொருள்களை உண்டாக்கும். பூமிதேவியானவள் தன்மக்களுக்கெல்லாம் வயிறாரப் பாலைஊட்டியபின் எஞ்சியபால முலையினின்றும்பெருகி, அவள் உடுத்திருந்த சேலையிற்சிந்துவதுபோல, பூதேயா நாட்டு மலையினின்றும் பெருகியஆறு, நானிலங்களைச் செழிப்பாக்கியபின் கடலிற்சென்று கலக்கத்தக்க நிறைந்த நீர்ப்பெருக்குடையது. ஆதலின், "மலிய நால்திணை அருந்தியபின் அலையினேருறல்" என்றார்.

தாயின் முலையில் முடுகியபால் வெளிச்சிந்துவது தாய்க்கு இன்பம்பயப்பதாதலின் "களிப்பொடு சிந்துவபோன்றே" என்றார் இக்கருத்தையே.

"சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வரவுநீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்" —கம்பரா, ஆற்று 12.

எனக் கம்பரும்;

"சரையெனும் பெயருடைத் தடங்கொள் வெம்முலைக்
குரைபுனற் கன்னிகொண் டிழிந்த தென்பவே" —சீவக 39.

எனத் திருத்தக்கதேவருங் கூறுவது காண்க.

நானிலங்களாவன: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M. B. 3619

சண்டிக்குளி
கந்தையா தருமபாலனும்
பெண் மகேஸ்வரியும்
— வழக்காளிகள்.

எதிராக, பலாலி வலாய்றோட்டு
ஏறோடோமிக்குக் கிட்ட இருக்கும்
காக்கையன் கணபதி
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3619-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருகாணிக்காணி 1961-ம் ஆண்டு மார்கழிமீ 9-ந்தி சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,031/16-ம், 15-9-60 தொடக்கம் 11-1-61 வரைக்கும் ரூபா 600-க்குப் 10வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும் கோட்டுச்செலவு 196ரூபா 55சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோயிற்பற்று, பத்தமேனிஇறை "கிடுகட்டை" நிலப்பரப்பு 6, குளி $10\frac{1}{4}$. இதில் நடுவாக நிலப்பரப்பு 2 குளி $5\frac{1}{8}$. இதில் கிழக்குப்பக்கமாக எதிரிகளின் பாவிப்புக்காக விடப்பட்ட 9அடிஅகலமுள்ள ஒழுங்கைக்கு விடப்பட்ட குளி $2\frac{3}{4}$நீக்கி மிகுதி நிலப்பரப்பு 2, குளி $2\frac{3}{8}$-உம், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு— எதிரிக்காக வைக்கப்பட்ட 9அடிஅகலமான ஒழுங்கை. வடக்கு — சின்னவன் கிட்ணனுக்குரிய ஆதனம். மேற்கு — சின்னத்தம்பி நாகமணிக்கும், சகோதரங்களுக்கும் உரியஆதனம். தெற்கு — கதிரன் கணபதிக்குச் சொந்தமான இவ்வாதனத்தின் மிகுதிஆதனம். இதடங்கலும். இக்காணிக்குத் தெற்குப்பக்கமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலும், இன்னும் இக்காணிக்குத் தெற்குப்பக்கமாக இருக்கும் வெள்ள வாய்க்கால் ஒழுங்கையிலிருந்து புதிதாக எதிரியுடைய நிலத்திலிருந்து வைக்கப்பட்ட இரண்டு ஒழுங்கைகள் வழியாகவும், அடுத்த காணிக்கூடாகவும் போக்குவரவு செய்யும் பாதைஉரித்தும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF MANNAR

In the matter of the intestate estate of Thangammah wife of Vaitilingam Ambalavanapillai of Karainagar, Jaffna late of Mannar.
Deceased

Testamentary Jurisdiction } No. 856.

Doctor Ambalavanapillai Vaithilingam of Karainagar, Jaffna.
Petitioner

Vs.

Vaithialingam Ambalavanapillai of Karainagar, Jaffna.
Respondent

This action coming on for disposal before R. Paramakuru, Esquire, Additional District Judge, Mannar on the 7th day of October, 1960 in the presence of M. M. Sultan, Proctor on the part of the petitioner; and the affidavit and petition of the petitioner having been read:

It is ordered that the petitioner be and he is hereby declared entitled to have letters of administration to the estate of the deceased abovenamed as sole heir and son unless the respondent abovenamed or any other persons concerned shall on or before the 2nd day of May, 1961 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 7th day of March, 1961.
Sgd. T. J. Rajaratnam,
Addl. District Judge.

2-5-61.
Extended and reissued for 13-6-61.
Sgd. K. Sinnathamby,
Addl. District Judge.

13-6-61.
Extended and reissued for 11-7-61.
Sgd. K. Sinnathamby,
Addl. District Judge.

11-7-61.
Extended and reissued for 22-8-61.
Sgd. T. J. Rajaratnam,
Addl. District Judge.

22-8-61.
Extended and reissued for 5-10-61.
Sgd. T. J. Rajaratnam,
Addl. District Judge.

3-10-61.
Extended and reissued for 14-11-61.
Sgd. T. J. Rajaratnam,
Addl. District Judge

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க. செய்திகள்

## திருச்சபையின் வளர்ச்சி

1. கத்தோலிக்கரின் தொகை கடந்த ஓராண்டில் ஆபிரிக்காவில் 10,00,000 அதிகரித்துள்ளது; ஆசியாவில் 3,65,000 அதிகரித்திருக்கிறது.

2. ஹங்காங் தீவில் மாதம் ஒன்றுக்கு 1,000 பேர் மனந்திரும்பி கத்தோலிக்க மறையைத் தழுவுகின்றனர்.

3. தென்வியற்னமில் கடந்தநான்கு வருடங்களில் 63,000பேர் மனந்திரும்பியுள்ளனர்; இவ்வாண்டில் முதல் இரு மாதங்களில் மட்டும் 1,641 ஞானஸ்நானங்கள் கொடுக்கப்பட்டன; 70,995பேர் ஞானஸ்நானம்பெறத் தயார்செய்து கொண்டிருக்கின்றனர்.

4. கொரியாவில் விபூதித் திருநாள் முதல் பாஸ்கு விழாவரை 12,000பேர் ஞானஸ்நானம் பெற்றனர்; அயல் நாட்டுக் குருக்களின் தொகையைக் கடந்து கொரிய குருக்களின் தொகை பெருமளவில் உயர்ந்துள்ளது. அயல் நாட்டுக் குருக்கள் 198 பேர். உள்நாட்டுக் குருக்கள் 243 பேர்.

5. இந்தியாவில் கத்தோலிக்கரின் தொகை 60 இலட்சமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, பெஸவாடா மேற்றிராசனத்தில் கத்தோலிக்கரின் தொகை இருபது ஆண்டுகாலத்தில் மும்மடங்காகப் பெருகியிருக்கின்றது. (90,000) —கத்தோலிக்க கல்லூரிகளின்தொகை 80—சென்னையில் 'ஸ்டெல்லா மாரிஸ்' கல்லூரியை நடத்தும் கன்னியரின் வியத்தகு திறமையைக்கண்டு, விஜயவாடாவிலுள்ள ஒரு கல்லூரி நிர்வாகத்தையும் மேற்கொள்ளுமாறு அரசாங்கம் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுள்ளது—பெங்களூரில் அனைத்திந்திய மருத்துவக்கல்லூரி ஒன்று தொடங்க தீவிரஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, —இந்தியக்கன்னியர் ஆஸ்திரியாவில் மடம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்; ஜேர்மனியில் அலுவலாற்றச் சென்றிருக்கின்றனர். — இந்திய குருக்கள் பிரிட்டிஷ் கயானுவிற்கு வேதம்போதிக்கச் சென்றுள்ளனர்.

6. ருவாண்டா உருண்டியில் வாரந்தோறும் 1,400பேர் ஞானஸ்நானம் பெறுகின்றனர்.

7. பொஸ்னியாஹேர்ஸேகோவினாவிலும் தங்கநீக்காவிலும் கத்தோலிக்கர் தொகை ஓராண்டில் 183,400லிருந்து 200,100ஆக உயர்ந்துள்ளது; நாட்டின் மக்கள் தொகையில் கத்தோலிக்கர் மூன்றில் இரண்டுபங்கு.

8. பொதுவில் விசுவாசப் பரம்புதல் திருச்சங்கத்தின் கண்காணிப்பிலுள்ள வேதப்போதக நாடுகளில் ஓராண்டளவில்,

—மேற்றிராசனம் போன்ற 15ஆட்சிப் பிரிவுகள் புதிதாகத் தோன்றியுள்ளன (மொத்தம் 741).

—42மேற்றிராணிமார்கள் புதிதாய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; இவர்களுள் 14பேரை 21-5-61-ல் பாப்பரசரே தம்கைப்பட அபிஷேகம் செய்து வைத்தார்.

* * *

## 85 மிஷனரிமாருக்கு இந்தோனேஷியாவில் பிரஜாஉரிமை

இந்தோனேஷியாவில் 85 மிஷனரிமாருக்குப் பிரஜாஉரிமை வழங்கப்பட்டுள்ளது. மொன்சிஞ்ஞோர் வில்லியம் சிலகென்ஸ், கெற்றாபாங் அப்போஸ்தொலிக்க நிர்வாகி, சுரபாஜ் மேற்றிராணியாரான குருஸ்ரர் ஆண்டகையும் இந்த 85 பேருள் அடங்குவர்.

மிஷனரிமார், இந்தோனேஷியா சரித்திரம், பாஷை என்னும் பாடங்களில் பரீட்சிக்கப்பட்டனர். மேற்படி நடபடிக்கைகள் வேதபோதகத்திற்கு அதிகநம்பிக்கையூட்டும் காரியங்களாயமைந்துள்ளனஎன்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

## கினியாவில்

கினியாவில் பொதுவுடைமை அரசு கத்தோலிக்க பள்ளிகளை எல்லாம் விழுங்கிவிட்டது. அங்கிருந்த குருமடத்தை மூடி மாணவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டது. கினியாவின் தலைவர் செகு தூரே பதவியேற்ற ஒரு மாதத்திற்குள் கினியா ஆண்டகைகளின் தலைவரான பேரருட் பெருந்தகை ஜெரார்ட் டெ மில்வில் ஆண்டகையை நாடுகடத்தினர். ஒரு ஆபிரிக்கனே இவ்வாண்டகையின் பதவியை ஏற்க வேண்டும் எனக் கூறியுள்ளார் தூரே. ஜெரார்ட் ஆண்டகை கத்தோலிக்க பள்ளிகளைக் காப்பாற்றப் போராடினர். ஆகவே, நாடுகடத்தப்பட்டார்.

* * *

## கொம்யூனிஸ்தர்களுக்கு நல்ல சூடு

பேருவிலுள்ள அரக்குவிபா சர்வகலாசாலையில் நுழைந்து சதிசெய்யஎத் தனித்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டமையால் பொதுவுடைமையர் தலைமறைவாகத் திரியவேண்டியிருக்கிறது. சர்வகலாசாலை மாணவமன்றத் தேர்தல்களில் ஒரு இடமேனும் பெற்றிலர். அரக்குவிபா அதிமேற்றிராணியார் தனிச் சொத்துரிமை, சமூகநீதி பற்றி விடுத்த நிருபம் அவர்களுக்கு நல்ல சூடு கொடுத்திருக்கிறது.

உலகெங்கும் திருச்சபைக்கு விரோதமாய்ப் பொதுவுடைமையர் செய்து வரும்அக்கிரமங்களுக்குப்பரிகாரமாகக் குஸ்கோவில் 10ஆயிரம் மக்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

* * *

## வைதீக கருத்துகள் பாடசாலைகளில் இடம்பெற வேண்டும்

எக்கல்வி நிலையிலும் ஆன்மீக கருத்துகளும், கொள்கைகளும் இடம்பெற வேண்டும என இந்தியாவில் கேரள அரசாங்கத்தின் கல்வி ஆராய்ச்சிக்குழு சிபாரிசு செய்திருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கும், உயர்தரக்கல்வி நிலையங்களுக்கும் ஒழுக்கமுறையை வகுத்துக் கூறுமாறு மேற்படி குழு நியமிக்கப்பட்டது

அரசியல் விவகாரங்களில் மாணவர் முற்றுகப் பங்குபற்றக் கூடாதெனவும், மாணவ மன்றங்களுக்குக் கண்ணியமுள்ளவர்கள் தலைவர்களாகத் தெரியப்படவேண்டுமெனவும் கூறியிருக்கிறது.

* * *

## வியற்னமில் மரியாயின் சேனைத்தலைவர் வேதசாட்சியாகக் கொல்லப்பட்டார்

இங்குயென் வான்திருன் வியற்னமிலுள்ள நான்கு எனும் விசாரணைப் பங்கின் மரியாயின் சேனைப் பிரசீடியமொன்றின் தலைவரான இவர், மரியாயின் சேனையை முற்றுக ஒழித்துவிடவேண்டுமென்ற கொம்யூனிஸ்தரின் கோரிக்கைக்கு இணங்க மறுத்த தன்பேரில் வெட்டிக்கொல்லப்பட்டார். வியற் கொங் பகுதியிலுள்ள கொம்யூனிஸ்த கொரில்லாப் படையினர் அக்கிராமத்திலுள்ள 5 பிரசீடியங்களின் தலைவர்களுக்கு மரியாயின் சேனைகளைக் கலைத்துவிடும்படி குறிப்புகள் அனுப்பியுள்ளனர். இங்கு சேனைக்கூட்டங்கள் நடாத்துவது முயற்கொம்பாகிவிட்ட போதும், சேனை ஊழியர் சேனை ஆர்வத்தோடு தொடர்ந்து தொண்டுசெய்து வந்தனர். இங்குயென் வியற் கொங் வீரர் அவர் மீன்பிடிக்கச் சென்ற போது பிடித்தனர். "மக்கள் நீதி மண்றத்தின்முன்" அவரை நிறுத்தி அதன் தீர்ப்புப்படி கோடரியினல் வெட்டிக் கொல்லப்பட்டார்.


## ·நேயர்கள் கவனிக்கவும்

எனது கண்பரிசோதனை நிலையத்துக்குப் பக்கத்தில் "பெர்னன்டோ" என்ற விலாசத்துடன் ஒரு நிலையம் ஆரம்பமாகியுள்ளது. அது எனது நிலையமன்று.

வி. ரி.
பெர்னன்டோ,
பல் வைத்தியர், கண் பரிசோதகர்
11, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.


## ரூமை மேற்றிராசனத்தின் சல்லாபப் பூசைமுறை

ரூமை மேற்றிராசனத்தில் சம்பாஷணைப் பூசையில் சுதேசமொழி உபயோகிக்கப் படுகின்றது. அங்கு விதித்திருக்கும் ஒழுங்குகளின்படி வாசகரும், முதலோதியும் ஒரேஆளாயிருக்கலாம். குருவானவர் பாவசங்கீர்த்தன மந்திரம் லத்தீனில் செபிக்கும்பொழுது வாசிப்பவரும், சமுகமாயிருக்கும் விசுவாசிகளும் இத்தாலிய மொழியில் அதே செபத்தைச் சொல்லுகிறார்கள். 'கிரியே' என்னும் பிரார்த்தனையின்போது வாசிப்பவரும், விசுவாசிகளும் அதே வேண்டுதலைச் சுயமொழியில் செய்கிறார்கள். 'குளோறியா' சொல்லும் வேளை சிறு குறிப்புக் கூறியபின் முழுச் செபமும் லத்தீன் மொழியில் சொல்லப்படுகிறது. சபைச்செப நேரத்தில் மௌனம் நிலவுகிறது. நிருபமும், சுவிசேஷமும் இத்தாலிய மொழியில் வாசிக்கப்படுகிறது. விசுவாசஉச்சாரணத்தை முதலோதியும், விசுவாசிகளும் இத்தாலியமொழியில் செபிக்கின்றனர். காணிக்கை வேளையில் சிறு செபங்களை முதலோதி வாசிக்க, விசுவாசிகள் பதில் கூறுகிறார்கள் முகவுரைவேளை மௌனம் நிலவுகிறது. முதல் ஓதியும், விசுவாசிகளும் 'சாங்தூஸ்' செபத்தைச் சுயமொழியில் செபிக்கின்றனர். மரித்தவர்களின் ஞாபகத்தில் முதலோதி சுருக்கமான செபம் வாசிக்கிறார். குருவானவர் பரமண்டலமந்திரம் சொன்னபின் முதலோதியும், விசுவாசிகளும் சுயமொழியில் இச்செபத்தைச் சொல்லுகிறார்கள். 'ஆஞ்ஞுஸ்டேயி' என்னும் செபத்தை முதலோதியும், விசுவாசிகளும் இத்தாலியமொழியில் செபிக்கின்றனர். சற்பிரசாதம் உட்கொள்ளுமுன் மனஸ்தாப முயற்சி சுயமொழியிற் சொல்லப்படுகிறது. சற்பிரசாதவினியோக வேளை 'ஆண்டவரே! தேவரீர் என்கூரையின்கீழ் எழுந்தருள ...' என்ற செபம் இத்தாலிய மொழியில் சொல்லப்பட்டு, நற்கருணைக் கீதங்களும் அம்மொழியில்பாடப்படுகின்றன. அனுபவிப்பின்பின் தோத்திரச்செபம இத்தாலிய மொழியில்செபிக்கப்படுகின்றது. குருவானவர் பூசை முடித்துச் செல்லும்பொழுது இத்தாலிய மொழியில் கீதங்கள் பாடப்படுகின்றன.


எங்களிடம் விற்பனைக்கு!



### பாலர் குறிப்பிடம்

| | |
|---|---|
| 2-ம், 3-ம் வகுப்பு ... | 1-00 |

*

### சின்னக் குறிப்பிடம்

| | |
|---|---|
| நாலாம் வகுப்பு ... | -80 |
| ஐந்தாம் வகுப்பு ... | -80 |

*

### பெரிய குறிப்பிடம்

| | |
|---|---|
| ஆரும் வகுப்பு ... | -75 |
| ஏழாம் வகுப்பு ... | -75 |
| எட்டாம் வகுப்பு ... | -75 |

*

### மாணவர் கிறிஸ்தவ போதகம்

| | |
|---|---|
| சிரேஷ்ட வகுப்பு ... | 1-25 |

*

### நவமணி வாசகம்

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு ... | -50 |
| மேற்பிரிவு ... | -50 |
| இரண்டாம் வகுப்பு ... | -60 |
| மூன்ரும் வகுப்பு ... | -70 |
| நாலாம் வகுப்பு ... | -80 |
| ஐந்தாம் வகுப்பு ... | -90 |
| ஆரும் வகுப்பு | இல்லை |
| ஏழாம் வகுப்பு ... | 1-00 |

*

### கத்தோலிக்க வாசகம்

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு | இல்லை |
| மேற்பிரிவு ... | -50 |
| இரண்டாம் வகுப்பு | இல்லை |
| மூன்ரும் வகுப்பு ... | -70 |
| நாலாம் வகுப்பு | இல்லை |
| ஐந்தாம் வகுப்பு ... | -90 |

*

### தமிழ் அறிவு

உயர்தர வகுப்பிற்குரியது
எழுதியவர்: க. பே. முத்தையா
பாடநூற் பிரசுர ஆலோசனைச்சபை அங்கீகரித்தது.
பிரதி விலை: 3-50.

*

### தமிழ்ப் பயிற்சி

ஆசிரியர்கள்:
க. பே. முத்தையா — ம. விக்றர்

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு ... | -65 |
| மூன்ரும் வகுப்பு ... | -90 |
| நாலாம் வகுப்பு ... | 1-25 |

*

### வளரும் தமிழ்

ஆசிரியர்:
G. J. ஆசிநாதன்

| | |
|---|---|
| பகுதி—I ... | 1-30 |
| பகுதி—II ... | 1-75 |
| பகுதி—III ... | 2-75 |

*

### திருச்சடங்குக் கோவை

பிரதி விலை: 3-50.

| | |
|---|---|
| பூசைஉதவி மந்திரச்சுருக்கம் | -05 |
| ஆசிரீர் ஒரு ஞானப்பொக்ஷம் | -05 |

*

### யேசுக்கிறீஸ்துநாதருடைய பரிசுத்த சுவிசேஷம்

| | |
|---|---|
| அர்ச். மத்தேயு ... | 1-50 |
| அர்ச். லூக்கா ... | 1-25 |
| அர்ச். மாற்கு ... | 1-50 |
| அப்போஸ்தலர் நடபடிகள் | 1-00 |

*

A Set of Roman Brevary
In 2 Parts By Mame.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday November 11-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org